1/2
218



# திருக்குறள்

# குறள் நீதி

## (அறத்துப்பால்)

★

தொகுப்பாளர்:

திரு. ப. சு. கண்ணப்பர்

சரஸ்வதி மஹால், ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம்.


பதிப்பாளர்:

S. T. S. ரங்கநாதன்.

★

அச்சிட்டோர்:


சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சி.



## சமர்ப்பணம்

குறள் தந்த நீதியில் வளர்ந்து, வாழ்ந்து, பெருவாழ்வெய்திய, திருச்சி பிரபல பாத்திரக் கடை, உயர்திரு S. T. சண்முகம் செட்டியார் அவர்களின் மூன்றும் ஆண்டு நிறைவு நினைவு மலராக இந்நூலை அணிவிக்கின்றேன்.

ப. சு. கண்ணப்பன்



இந்நூல் தொகுப்பாளர் :

**திரு. ப. சு. கண்ணப்பர்.**

# நூன்முகம்

---

பாரதநாட்டின் ஆட்சியாளர்கள் பலர். பல்வேறு காலத்தவர். பல சமயத்தினர். அவர்களின் காலங்களில் தமிழில் கலப்பு ஏற்பட்டது. கலங்காது எதிர்ப்பையும் எதிர்த்து-தலைநிமிர்ந்து-இன்றும் இனிமை குன்றாமல் வெற்றி நடை போடுவது நம்தமிழ்தான். காரணம்? அதில் இனிமையும் உயிரும் ஆற்றலும் சொந்த வலிமையும் இருக்கின்றன.

தமிழன் என்றும் அறிவுடையவன். உலகினையே முன் வைத்துப்பாடிய பண்பும் பெருமையும் தமிழனுக்குத்தான் உண்டு. அதற்கு எடுத்துக்காட்டு நம் வள்ளுவர் குறள். இந்நூலுக்கு விளக்கவுரை கூறியவருள் யானும் ஒருவன்.

ஒவ்வொரு தமிழ்ப் பெருமகனும் குறளையுணர்ந்து அதன்படி நடக்க வேண்டுமென்னும் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதே "குறள் நீதி" என்னும் இத்தொகுப்பு. அனைவரும் எளிதில் படித்து உணரமுடியும். உணர்ந்து பயன்பெறுவார் களேயானால் அதுவே என் முயற்சிக்கு அவர்கள் காட்டும் நன்றியெனக் கருதுவேன்.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பாலென்னும் முப்பாலில் இது அறத்துப்பால். ஏனைய இரு பாலையும் தொகுக்க வேண்டுமென்பது என் விருப்பம். மற்றைய தொகுப்புக்களின் முயற்சியும் விரைவில் வெற்றிகொண்டு அச்சேற இறைவனைப் பணிவன்போடு வணங்குகிறேன்.

இங்ஙனம்,

ப. சு. கண்ணப்பன்.



[illegible]

திரு S. T. S. ரங்கநாதன்

# பதிப்புரை

---

சீரம்வாய்ந்த தமிழகம் இன்று குறளையும் அதனை ஆக்கித்தந்த ஆசிரியனையும் தலைவணங்கிப் போற்று கிறதென்றால் அதன் சிறப்பு, அழியா உண்மை, சமரச நீதி மனப்பான்மை முதலியன காரணமெனில் மிகை யாகாது. எனினும் அந்நூலின் பொருளை எளிதில் உணர்வார் மிகக் குறைவென்பதை நாம் மறுக்க முடியாது. காரணம்? யாவரும் உணரும்படியாக உரை நூல் வகுக்கத் தவறியதேயாகும். அக்குறையைப் போக்க நான் பலகால் சிந்தித்ததுண்டு.

அறிஞர் கண்ணப்பர் அவர்கள், அன்பின் முயற்சி யால், என்னுளச்சோர்வு கண்டு செவிசாய்த்து, அக் குறையைப் போக்க முன்வந்தது தமிழகம் செய்த தவப்பயனென்றே எண்ணுவதுடன் நான் அன்னாருக்கு மிக்க நன்றி செலுத்தக் கடமைபட்டவனுமாவேன்.

இந்நூல் வெளியிடுவதில் நான் பெருமைப் படுகிறேன். தாயுமானப் பெருமானார் கூறியபடி "எல்லோரும் இன்புற்-றிருக்க நினைப்பதுவே என் இன்பம்" எனக்கருதி, பழகி, செயலாற்றிவந்த என் மரபின் பெருமையும் கடமையும் தூண்ட, என் எண்ணம் முயற்சிவாயிலாக இதைத் துணிந்து அச் சேற்றியது. இலவசமாக வழங்கவும் இசைந்தது.

இவைபோன்ற நூல்கள்பல தமிழகத்தை அலங்கரிக்க இறைவன் திரு. கண்ணப்பர் அவர்களுக்கு நீடிய ஆயுளை வழங்குவாராக.

இந்நூல் அச்சேறுங்கால், சொற்பிழை, வழூஉ கருத்து வேற்றுமை முதலிய குற்றங்களைக் களைந்து, உருவாக்க உதவிய திண்டுக்கல், வித்வ சரபம் திரு. சுப்பையா கவிஞரவர்கட்கும் நான் பெரிதும் கடமைப் பாடுடையேன்.

தமிழ் வளர வேண்டும். தமிழன் பெருமை, நீதி, வாழ்வு, பண்பு முதலியன உலகறிய வேண்டுமென்னும் தாய்மொழியின் குறிக்கோளான கருவூலம்தான் குறளும் அதன் தொகுப்பாகிய இச்சார்பு நூலும். இனி மேலே படியுங்கள்.

**சி. தா. ச. ரங்கநாதன்.**

## வித்வ சரபம், திண்டுக்கல்

## சுப்பையா கவிஞரவர்கள்

### பதிப்பாசிரியருக்கு வழங்கிய நல்லாசி.

(1)

பீடுநடை போடுகின்ற தமிழா! உன்றன்
பெருமைதனை பண்பதனைப் படைத்ததியாது?
நாடுபுகழ் தமிழகத்தான் வள்ளுவன்றன்
நலமிளிரும் குறட்பாவின் மகிமையன்றோ!
ஈடுநமக் கில்லையென இருந்தகாலம்
எத்தாகிப் போனதென்ன? இன்றுநீங்கள்
கூடுபசிப் பிணிவறுமை கூடிவிட்ட
குறையெல்லாம் "குறள்நீதி" மறந்ததாலே.

(2)

தான்வாழ இனம்வாழும் தமிழன்பண்பு
தழைத்தோங்கும் திரிசைவளர் ரங்கநாதன்
நான்தாரேன் பொருளுதவி என்றுசொல்லி
நலமாகுங் "குறள்நீதி" தனையுமச்சிட்
டானவனை வரும்படித்துப் பயனுமெய்த
அவனுதவிக் கிவ்வுலகம் என்றும்நன்றி
தான்கூற வேண்டுவது கடமையென்றே
தானெப்புக் கொள்வான்நற் றமிழன்தானே.

(3)

இன்னுமிவை போல்பலநூல் அச்சிட்டீய
இறைவனருள் நீடித்த ஆயுள் தந்து
பன்னெடுநாள் வாழ்கவவன் புகழுங்கீர்த்தி
பாரெல்லாம் இசைபரப்பி வாழ்கவாழ்க!

கன்னல்மொழி தமிழன்னைக் கருணையாலே
கலைதழைக்க வழிவகுத்த கவனங்கண்டு
நன்னயமாய் ஊக்குவித்தோம் நாமும்அன்பால்
நமதாசிக் குரியவனெந் நாளுந்தானே.

☆

கவிதா நிலையம்
திண்டுக்கல்

சுப்பையா கவிஞர்
28—1—58.

## பதிப்பாசிரியருக்கு தொகுப்பாசிரியரின்

# வாழ்த்து.

கவி

நாட்டிற் கொருநன்மை நலந்தரத் தக்கதாய்
நாளும்நீ டிப்பதுவாய்
நாம்செய்ய வேண்டுமென நமதன்ப ராம்ரங்க
நாதனிடம் சொன்னபோது

கேட்டு மகிழ்ந்திந்த "குறள்நீதி" அச்சிடக்
கெம்பீர மாய்த்துணிந்த
கேண்மைக்கு மகிழ்ச்சிமற் றிவன்றமிழன் மாண்பிற்குங்
கேதன முயர்த்திவைத்தான்

காட்டிடும் அறத்துப்பால் கனியவுரை நடையினைக்
கைக்கொண்டு தொகுத்துயிந்த
கருத்துக்கள் பலபெரியார் கனிவாயின் திருமொழிகள்
கற்றிட வெளிவுமான

பாட்டையில் அழகுநடைப் பாணியில் தந்துதவப்
பண்புவைத் தவர்தமக்குப்
பாமாலை யெனதாசி யாம்ரங்க நாதமால்
பல்லாண்டு வாழ்கவாழி !

தமிழ்க்கோட்டம்
திரிசை.

ப. சு. கண்ணப்பன்.

# குறள் நீதி

## அறத்துப்பால்

## உரைநடை விளக்கம்

# கடவுள் வாழ்த்து

எல்லா எழுத்துக்களும் அகரத்தை முதலாக உடையன: அதுபோல உலகம் ஆதிபகவனை (இறைவனை) முதலாகக்கொண்டுள்ளது. ௧

உண்மை உணர்வுடையவனின் தூய திருவடிகளைத் தொழாமல், எவ்வளவு நூல்களைக் கற்றாலும் அதனால் என்ன பயன் விளையும்? ௨

உள்ளத் தாமரையில் உறையும் ஒருவனின் சிறந்த திருவடிகளைச் சேர்ந்தவர்கள், மேலான உலகில் அழிவின்றி வாழ்வர். ௩

விழைவும் வெறுப்பும் அற்றவன் திருவடியைச் சேர்ந்தவர்களுக்கு, எங்கும் — என்றும் இன்னல்கள் உண்டாவதில்லை. ௪

இறைவனின் உண்மையான புகழை விரும்பி நேசிப்பவர்களிடம், இருளைத்தருகின்ற நல்வினை தீவினைகள் நெருங்குவதில்லை. ௫

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து பொறிகளின் மூலம் எழும் ஆசைகளை ஒழித்தவனின் (கடவுளின்) மெய்யான ஒழுக்கத்தில் நிலைத்து நின்றவர்கள், அழியாத வாழ்வு பெறுவர். ௬

ஒருவிதத்திலும் தனக்கு நிகரில்லாதவனுடைய தாளைச் சேர்ந்தவர்களுக்கு அல்லாமல், மற்றவர்களுக்கு மனதிலே நிகழும் துன்பங்களைப் போக்கமுடியாது. ௭

அறக்கடலாகிய அந்தணனது (இறைவனது) தாள் சேர்ந்தார்களைத்தவிர மற்றவர்கள், மற்றகடல்களாகிய பொருள் இன்பம் இவைகளைக் கடப்பது அரிது. ௮

தங்களுக்குரிய உணர்ச்சிகளைக் கொள்ளாத, மெய், வாய், கண், மூக்கு, செவி, பயன்பட மாட்டா. அதுபோலவே எட்டு குணங்களையுடைய இறைவனின் தாளை வணங்காதவர் தலைகள் பயனற்றவை. ௯

இறைவனடி யென்னும் புணையைச் சேர்ந்தோர், பிறவி என்னும் பெருங் கடலை நீந்துவர். அதனைச் சேராதவர்கள் நீந்தமுடியாதவர்களாகி அதனுள்ளே அழுந்துவர். ௰

# கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். 2

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. 4

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. 7

அறவாழி அந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. 8

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை. 9

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். 10

# 2. மழையின் சிறப்புக் கூறல்

மழை பொழிந்து உலகை நிலைபெறச் செய்து வருதலால், அம்மழை உலக உயிர்கட்கு அமிர்தம் என்று அறியும் தன்மையை உடையது. ௧

உண்பார்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கித்தந்து, அவற்றை உண்கின்றவர்க்குத் தானும் ஓர் உணவாக (நீராகாரமாக) இருப்பதுவும் மழையே. ௨

வேண்டும் காலத்தில் மழைபொழியாது பொய்க்குமானால், விரிந்த நீரால் சூழப்பட்ட இந்தப் பெரிய உலகின்கண், பசியானது நிலை பெற்று நின்று உயிர்களை வருத்தும். ௩

மழை என்னும் வருவாய் தன் பயன் குன்றிவிட்டால், உழவர் ஏர்கொண்டு உழுதலைச் செய்யார். ௪

புவியில் வாழ்வோரே பெய்யாமல் கெடுப்பதும், அவ்வாறு கெட்டவர்களுக்குத் துணையாகப் பெய்து முன்கெடுத்தாற் போல எடுப்பதும், எல்லாம் செய்ய வல்லது மழை. ௫

மேகத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லது, உலகில் பசுமையான புல்லின் நுனியையும் காணமுடியாது. ௬

கடலின் நீரை மேகம் குடித்து, மறுபடியும் மழையாகப் பொழியாவிடின், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும். ௭

மழை பொழியாது ஒழிந்தால், இவ்வுலகில் தேவர்களுக்காக மக்களால் செய்யப்படும் திருவிழாவும், நாள் வழிபாடும் நடவாது. ௮

மழைபெய்யாவிடின், அகன்ற உலகின்கண் தானம், தவம், என்னும் இரண்டு அறங்களும் நடைபெறமாட்டா. ௯

எவ்வளவு மேம்பட்டவர்களாயினும், அவர்கட்கு நீர் இல்லாமல் உலகியலானது நடைபெறாது என்றால், மழை பொழியா விட்டால், ஒழுக்கம் நிலைபெறாது. ௰

# 2. வான்சிறப்பு

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று. 11

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை. 12

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி. 13

ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். 14

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை. 15

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. 16

நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின் 17

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. 18

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 19

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. 20

# 3. முனிவரது பெருமை கூறல்

அவரவர்களுடைய ஒழுக்கத்தினின்றும் வழுவாது நிலைத்து நின்று, எப்பற்றுமற்று இருப்பவர்களின் சிறப்பை போற்றிப் புகழ்வதே நூல்களின் துணிவு. ௧

பற்றுகளை விட்டவர்களின் பெருமைகளை இவ்வளவு என்று கணக்கிட்டுக் கூறுதல், இன்றுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக்கணக்கிடுவது போன்றதாகும். ௨

பிறப்பின் துன்பம், மோட்சத்தின் இன்பம் ஆகிய இரண்டினை ஆய்ந்தறிந்து, இம்மையில் அப்பிறவித் துன்பத்தைப் போக்க அறத்தை மேற்கொண்டவர்களின் பெருமையே இவ்வுலகில் உயர்ந்தது. ௩

அறிவாயுதம் தாங்கி, ஐம்பொறிகளென்னும் யானைகளை, புலன்கள்மேல் செல்லாமல் காப்பவன், மேலான முத்தி நிலத்திற்கு விதைபோன்றவன். ௪

புலன்கள்மேல் செய்கின்ற ஐந்துஆசைகளையும் அடக்கியவனின் ஆற்றலுக்கு, விரிந்த விண்ணில் வாழ்வோரின் தலைவனாகிய, இந்திரனே போதுமான எடுத்துக்காட்டு. ௫

பெரியோரெனப்படுவோர், மற்றவர்கள் செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்பவர். சிறியோரெனப்படுவோர் செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்யமுடியாதவர்கள். ௬

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப்படும் ஐந்தின் கூறுபாடுகளையும் ஆராய்ந்து அறிந்தவனின் அறிவினிடத்தே உள்ளது உலகம். ௭

நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை, உலகில் அழியாமல் நிலைத்திருக்கும் அவர்களுடைய மறை மொழியே எடுத்துக்காட்டும். ௮

நற்குணங்கள் என்னும் குன்றின்மீது ஏறிநின்ற அறவோர் கொள்ளும் கோபம், ஒரு கணமே நிற்குமாயினும், கோபிக்கப்பட்டவர் அதைத் தடுத்துக்காத்தல் அரிது. ௯

எல்லா உயிர்களிடத்தும் செம்மையான கருணை பூண்டு ஒழுகுவதால், அறவழி நடப்பவர்களே அந்தணர் என்று அழைக்கப்படுவர். ௰

## 3. நீத்தார் பெருமை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. 21

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று. 22

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 23

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 24

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி. 25

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 26

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு. 27

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 28

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது. 29

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். 30

## 4. அறன் வலியுடைத்தென்பது கூறல்

அறமானது சிறப்பையும், செல்வத்தையும் அளிக்க வல்லது. ஆகவே, வாழும் உயிர்கட்கு அறத்தைவிட ஆக்கமானது வேறு என்ன இருக்கிறது ? க

ஒருவனுக்கு அறம் செய்தலைக்காட்டிலும் மேம்பட்ட ஆக்கமுமில்லை. அத்தகைய அறத்தை மறத்தலைக்காட்டிலும் மேம்பட்ட கேடுமில்லை. உ

தத்தமக்கு இயலும் முறையில் அறமாகிய நல்வினையை விடாமல், அந்த அறமானது செல்லுமிடங்களிலெல்லாம் அதனைச் செய்ய வேண்டும். ங

அறமெனப்படுவது, மாசற்ற மனத்துடன் இருப்பதே யாகும். அதற்கு அயலான மற்றவை ஆரவாரத் தன்மை உடையன. ச

பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கினையும் கடிந்து இடையறாது ஒழுகியதே அறம். ரு

யாம் இப்போது இளைஞர்கள், பிற்காலத்தில் அறம் செய்யலாம் என்று எண்ணாமல், நாள்தோறும் செய்தல் வேண்டும். அதுவே உடம்பு அழியும்போது அழியாத துணையாகும். சு

அறத்தினால் உண்டாகும் பயனை அறிய நூல்களின் துணைகொண்டு ஆராய்தல் வேண்டாம். பல்லக்கை சுமப்பவனையும், அதன்மீது அமர்ந்து செல்பவனையும் கண்டு தெளியலாம். எ

அறம் செய்யாது கழியும் நாட்களை ஒருவன் ஏற்படுத்திக்கொள்ளாமல் அறம் புரிவானாயின் அச்செய்கை அவன் உடம்போடு கூடும் நாள் வரும் வழியை அடைக்கும் கல்லாம். அ

இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பம். அதனோடு பொருந்தாமல் வருபவையெல்லாம் துன்பம். அன்றியும் புகழும் உடையனவல்ல. கூ

ஒருவன் தன் வாழ்நாளில் முயன்று செய்யத்தகுந்தது அறம். செய்யாமல் ஒழித்துத் தன்னைக் காத்துக்கொள்ளத் தகுந்தது பழி. ௰

## 4. அறன் வலியுறுத்தல்.

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு. 31

அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. 32

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல். 33

மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற. 34

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். 35

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. 36

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. 37

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல். 38

அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில. 39

செயற்பால தோரும் அறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி. 40

# 5. இல்லாளொடு கூடிவாழ்தலின் சிறப்பு

இல்லறத்தோடு கூடி வாழ்வதாகச் சொல்லப்படுபவன், அறவியல் பிணையுடைய மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாகும். க

துறவிகளுக்கும், ஏழைகளுக்கும், யாசகர்களுக்கும் இல்லறம் நடத்துபவனே துணைவனாவான். உ

பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று கூறப்படும் ஐந்திடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்கு சிறந்த அறம். ங

பழிபாவத்திற்கு அஞ்சி பொருள் சேர்த்து, மற்றவர்களுக்கும் பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவன் சந்ததி என்றென்றும் நிலைக்கும். ச

அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை அமையுமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவேயாகும். ரு

ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின்வழியே செலுத்துவானாயின், அவன் அதற்குப் புறமாகிய நெறியில் போய்ப் பெறும் பயன் யாது ? சு

இல்வாழ்க்கையில் நின்று, அதற்குரிய அற இயல்போடு கூடிவாழ்பவன், புலன்களை அடக்க முயலும் மற்றவர்களைவிட மேம்பட்டு விளங்குவான். எ

தானும் நெறிதவறாது, மற்றவர்களையும் அறநெறியிலிருந்து தவறாமல் பாதுகாக்கும் இல்வாழ்க்கை, தவம்புரிவோர் நிலையைவிட வல்லமையுடைய வாழ்க்கையாகும். அ

நூல்களால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட அறமே இல்வாழ்க்கை. அஃது அடுத்தவர் பழிக்காளாகாமல் இருந்தால் மிகவும் நல்லது. கூ

இவ்வுலகில் ஒருவன் அறனெறியில் தவறாமல் நின்று, வாழும் முறை தெரிந்து வாழ்வானாயின், அவன் விண்ணுலக தேவனுக்குச் சமமாக மதிக்கப்படுவான். ௰

# 5. இல்வாழ்க்கை

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை. 41

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 42

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை. 43

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்ச லெஞ்ஞான்று மில். 44

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது. 45

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். 46

இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை. 47

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து. 48

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று. 49

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். 50

# 6. இல்லாளது நன்மை

மனையறத்திற்கு ஏற்ற நற்குணம் படைத்தவளாகி, தன் கணவனின் வருவாய்க்குத் தக்கபடி வாழ்க்கை நடத்துபவளே வாழ்க்கைக்குத் துணையாவாள். ௧

மனையறத்திற்கு தக்க நற்குணங்கள் இல்லாளிடம் இல்லையாயின், அவனுடைய வாழ்க்கை எவ்வளவு மாட்சிமை உடையதானாலும் அதனால் பயன் கிடையாது. ௨

மனைவி மாண்புடையவளானால் வாழ்க்கையில் ஒருவனுக்கு இல்லாதது என்ன? மனைவி நற்பண்பு அற்றவளானால் அவனுக்கு வாழ்க்கையில் இருப்பது என்ன? ௩

கற்பு என்னும் கலங்கா நிலைமை இல்லாள்கண் உண்டாகப்பெறின் இல்வாழ்க்கையில் ஒருவனுக்கு இல்லாளை விட மேம்பட்ட பொருள்கள் உண்டா? ௪

பிற தெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத்தொழுது துயிலெழுகின்றவள் ''பெய்'' என்றால் மழை பொழியும். ௫

கற்புநிலை தவறாது தன்னைக்காத்து, தன்கணவனை உண்டி முதலியவைகளால் பேணி, நீங்காத நற்புகழையும் காத்து, உள்ள உறுதியுடன் ஒழுகுபவளே பெண். ௬

பெண்டிரைத் தலைவர் சிறையால் காக்கும் காவல் என்ன பயன்தரும்? அவர்களே தம்மை கற்பு நெறியால் காக்கும் காவலே சிறப்புடையது. ௭

தங்கள் கணவனைப் போற்றும் பெண்டிர் பெருஞ் சிறப்புவாய்ந்த வானுலக வாழ்வு பெறுவர். ௮

புகழை விரும்பிய இல்லாளை இல்லாதவர்களுக்கு, தம்மை இகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்கேறுபோல நடக்கும் பெருமித நடையில்லை. ௯

மனையாளது நற்குணச்சிறப்பே ஒருவனுக்கு நன்மை என்பர். அந்த நன்மைக்கு அணிகலம் நல்ல மக்களைப் பெறுதல் என்றும் கூறுவர். ௰

# 6. வாழ்க்கைத் துணை நலம்

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை 51

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில் 52

இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை. 53

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 54

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. 55

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 56

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 57

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு 58

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை 59

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. 60

# 7. நன்மக்களைப் பெறுதல்

ஒருவன் பெறும் பேறுகளுள், அறிய வேண்டியவைகளை அறியும் நற்புதல்வர்களைப் பெறுவதைத்தவிர பிறபேறுகளை யாம் மதிப்பதில்லை. க

பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வர்களைப்பெறுவராயின், ஏழுபிறவிகளிலும் ஒருவனுக்கு வினைத்துன்பங்கள் சென்று அடையா. உ

தம் புதல்வரை தம்பொருள் என்று சொல்வர் அறிந்தோர். அப்புதல்வர்களின் பொருள்கள் அவரவருடைய நல்வினைப்பயனால் வந்துசேரும். ங

தம்மக்களுடைய சிறுகையால் அளாவப்பட்ட சோறு சுவையால் அமிழ்தத்தினும் மிக்க இனிமை உடையது. ச

ஒருவன் உடலுக்கு இன்பமளிப்பது தம்மக்களது உடம்பைத் தீண்டுதல். செவிக்கு இன்பமளிப்பது மக்களின் சொல்லைக் கேட்டல். ரு

குழலிசை இனிமை உடையது, யாழிசை இனிமையுடையது என்று சொல்வர், தம் புதல்வருடைய குதலைச் சொற்களை கேளாதவர். சா

தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையானது, கற்றோர் அவையின்கண் தன்மகனை முதல்வனாக இருக்குமளவு கல்வி யுடையவனாக்குதல். எ

தம் புதல்வர்கள் அறிவுடைமையானது, தமக்குத்தரும் இன்பத்தைவிட பெரிய உலகத்து உயிர்களுக்கெல்லாம் மிக்க இன்பம் தருவதாகும். அ

தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக்கேட்ட தாய், தான் அவனைப் பெற்றபொழுது பெற்ற மகிழ்ச்சியினும் பெரு மகிழ்ச்சி அடைவாள். கூ

மகன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறானது, "இவன் தந்தை இவனைப் பெறச்செய்த தவம் எதுவோ" என்று பிறர்புகழச் செய்தலாகும். ௰

# 7. புதல்வரைப் பெறுதல்

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 61

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 62

தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும். 63

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ். 64

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு. 65

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். 66

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி இருப்பச் செயல். 67

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. 68

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 69

மகன்றந்தைக் காற்று முதவி இவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல். 70

# 8. மனைவிமக்கள்மேல் காதலுடையனாதல்

அன்புக்குப் பிறர் அறியாமல் அடைத்துவைக்கும் தாழ் இருக்கிறதா? அன்பு செய்யப்பட்டவரது துன்பங் கண்டு பொழிகின்ற சிறு கண்ணீரே அவர்கள் உள்நிறை அன்பினை வெளிப்படுத்திவிடும். ௧

அன்பற்றவர்கள் எல்லா பண்டங்களையும் தம் உரிமையாகக் கொண்டு வாழ்வர். அன்புடையவர் தம் உடமையையும், உடலையும் பிறர்க்கு உரிமையாக்குவர். ௨

பெறுதற்கரிய உயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்பு அன்போடு பொருந்தி வாழும் நெறியின் பயன் என்பர் அறிந்தோர். ௩

அன்பு என்பது பிறரிடம் விருப்பமுடனிருக்கும் தன்மையைத்தரும். அந்த விருப்பமுடமைதான் பகைமையற்ற நட்பு என்னும் சிறப்பினையும் நல்கும். ௪

அன்புடையவராகப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன்தான், உலகில் இன்பமுற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு என்பர். ௫

அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று அறியாதார் கூறுவர். வீரத்திற்கும் அதுவே துணை என்பது ஆராய்ந்து பார்த்தால் தெரியும். ௬

எலும்பில்லாத உடலுள் வாழ்பவைகளை வெயில் காய்ந்து வேதனை உண்டாக்குவது போல், அன்பில்லாத உயிர்களை அறம்வருத்தி வேதனைப்படுத்தும். ௭

உள்ளன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்வது, வறண்ட பாலையில் பட்டமரம் தளிர்த்தற்போன்றது. ௮

உடலின் உள்ளுறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு ஏனைய புறத்து உறுப்புகள் எல்லாம் என்ன உதவியைச் செய்துவிடும்? ௯

அன்பை அடிப்படையாகக் கொண்டு நிற்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும். அன்பற்றவர்கள் தாங்கிய உடல்கள் எலும்பைத் தோலால் போர்த்த உயிரற்றவை. ௰

# 8. அன்புடைமை

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும். 71

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு. 72

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு. 73

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு. 74

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு. 75

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. 76

என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம். 77

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று. 78

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு. 79

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு. 80

# 9. பிறர்க்கீந்து உண்ணல்

இல்லறம் நடத்தி பொருள்களைக் காத்து வாழ்வு நடத்துவது ஏனென்றால் விருந்தினரைப்பேணி அவர்களுக்கு உபசாரம் செய்யும் பொருட்டே யாகும். ௧

உண்ணப்படும் பொருள் அமுதமே யானாலும், தன்னை நாடி வந்த விருந்தினரைப் புறத்தே இருக்கச்செய்து தான் மட்டும் உண்பது விரும்பத்தக்க முறையன்று. ௨

நாள்தோறும் தன்னை நாடிவரும் விருந்தினரைப் போற்றுகிறவன் வாழ்வு துன்புற்று கெடுவதில்லை. ௩

முகமலர்ச்சியோடு, நல்லவிருந்தினராக வந்தவரைப் போற்றுகிறவன் இல்லத்தில், திருமகள் மனமகிழ்ச்சியுடன் வாழ்வாள். ௪

முதலில் விருந்தினரைப் போற்றி உணவளித்து, மிஞ்சிய உணவை உண்டு வாழ்பவனின் நிலத்தில் வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டாம். ௫

வந்த விருந்தினரைப்பேணி, இனிவரும் விருந்தினரை எதிர் நோக்குபவன், விண்ணுலக தேவர்கட்கு நல்ல விருந்தினனாவான். ௬

விருந்தோம்பல் என்னும் வேள்வியின் பயன் இந்த அளவு என்று கூறமுடியாது. விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவாகும். ௭

விருந்தினரைப் போற்றி வேள்விப்பணியில் ஈடுபடாதவர், பொருள்களைக் கஷ்டப்பட்டுக்காத்து அதனை இழந்தபின் பற்றுக்கோடில்லாதவர்களாயினோமே என்றிரங்குவர். ௮

உடைமைக் காலத்தில் உள்ளவறுமை, விருந்தோம்பலை இகழும்பேதமை, அஃது அறியாதார் மாட்டு உள்ளதாகும். ௯

மோந்த உடன் வாடிவிடும் அனிச்சப்பூ. அது போல் மாறுபட்ட முகங்கொண்டு நோக்கியவுடன் விருந்தினர் முகம் வாடும். ௰

# 9. விருந்தோம்பல்

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 81

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 82

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று. 83

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில். 84

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். 85

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு. 86

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன். 87

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 88

உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு. 89

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 90

# 10. இனிய சொற்களைச் சொல்லுதல்

அன்போடு கலந்து வஞ்சனை இல்லாமலிருக்கின்ற, அறத்தினை உணர்ந்தவர் வாய்ச் சொற்களே, இன்சொற் களாகும். ௧

நெஞ்சு உவந்து ஒருவற்கு வேண்டிய பொருளைக் கொடுப்பதைவிட நல்லது, முகமலர்ந்த இன்சொல் உடைய வனாக இருக்கப் பெறுவது. ௨

முகத்தால் விரும்பி, இனிதாக நோக்கி, மனங்கலந்த இனியசொற்களைக் கூறும் தன்மையதே அறமாகும். ௩

எல்லோரிடமும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல் உடையார்க்கு, துன்பத்தை மிகுவிக்கும் வறுமை இல்லை யாம். ௪

ஒருவனுக்கு அணியாவது, பணிவுடையவனாகவும், இனிய சொல்லையுடையவனாகவும் இருந்தல். இவை இரண் டன்றி மற்ற அணிகள் அணியாகா. ௫

பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை மனத்தால் ஆராய்ந்து, இனிய சொற்கள் சொல்லின், பாவங்கெட அறம்வளரும். ௬

பொருளாற பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனி மைப்பண்பின் நீங்காதசொல், ஒருவனுக்கு இம்மைக்கு நீதியை உண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும். ௭

பொருளாற் பிறர்க்கு நோய் செய்யாத இனிய சொல் ஒருவனுக்கு இருமையிலும் இன்பம் பயக்கும். ௮

பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பம் பயத்தலை அனுப்பவிக்கின்றவன், பிறரிடம் வன்சொல்லைச் சொல்வது என்னபயன் கருதியோ? ௯

இனிமை தரும் சொற்கள் இருக்கும்போது, கடுஞ் சொற்களைக் கூறுவது, இனிய கனிகள் கரத்திலிருக்கும் போது காய்களைதின்பதை ஒக்கும். ௰

# 10. இனியவை கூறல்

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 91

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். 92

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம். 93

துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு. 94

பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற. 95

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி இனிய சொலின். 96

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். 97

சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும். 98

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 99

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 100

# 11. செய்த நன்மையை மறவாமை

தனக்கு முன் ஓர் உதவியும் செய்யாதிருக்க, ஒருவன் பிறருக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைமாருகத் தந்தாலும் ஈடாகாது. க

தேவையான காலத்திலே ஒருவன் செய்த உதவி சிறிதாயினும் அதனை ஆராய்ந்து பார்த்தால் உலகைவிடமிகப் பெரியதாகும். உ

இவனுக்கு இது செய்தால் இன்ன பயன் கிட்டும் என்று ஆராயாமல் செய்த உதவியை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப்பெரிதாகும். ௩

தமக்குத் தினையளவு உபகாரத்தை ஒருவன் செய்தாலுயினும், அதன் பயனை ஆய்வோர் பனையளவாகக் கருதுவர். ௪

கைம்மாருகச் செய்யும் உதவி, முன்செய்த உதவியின் அளவை உடையதன்று. உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாம். ௫

துன்பகாலத்தில் தமக்கு ஆதரவாக இருந்தவர்களின் நட்பை விடக்கூடாது. அறிவொழுக்கங்களில் குற்றமற்றவரது உறவையும் மறக்கக்கூடாது. ௬

தமக்கு இன்னல்களைக்களைய உதவியவர்களின் நட்பை எழுபிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர். ௭

ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறமன்று. அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன். ௮

தமக்கு முன்னால் ஒரு நன்மையைச் செய்தவன், பின்னர் சொல்லுதல் போன்ற துன்பம் விளைவித்தாலும், அவன் முன்செய்த நன்மையை நினைத்தால் அத்துன்பம் கெடும். ௯

பெரிய அறங்களைச் சிதைத்தவர்களுக்கும் துன்பம் நீங்கும் வழி உண்டாம். ஆனால் ஒருவன் செய்த உதவியை சிதைத்தவனுக்கு உய்வு இல்லை. ௰

# 11. செய்நன்றி யறிதல்

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. 101

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது. 102

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது. 103

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார். 104

உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 105

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 106

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. 107

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. 108

கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும். 109

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
ந்செய்நன்றி கொன்ற மகற்கு. 110

## 12. அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை

பகை, நொதுமல், நண்பு எனும் பகுதி தோறும் முறையோடு ஒழுகப்பெற்றால், நடுவு நிலைமை என்னும் அறமே நல்லதாகும். ௧

நடுவு நிலைமையை யுடையவனது செல்வம், அழிவில்லாமல் அவன் சந்ததிக்கும் வலிமையைத் தரும். ௨

நன்மையே தருவதாயினும், நடுவு நிலைமையை ஒழித்து உண்டாகின்ற ஆக்கத்தை அப்போதே ஒழிக்க வேண்டும். ௩

நடுவு நிலைமை உடையவரா ? அல்லவா ? என்பதை அவரவருடைய மக்களது உண்மையாலும், இன்மையாலும் அறியலாம். ௪

நல்வினை தீவினைகளால், ஏற்படும் ஆக்கமும் கேடும் எல்லோர்க்கும் இயற்கையே, அவற்றை அறிந்து மனத்தின் கண் நடுவு நிலைமை தவறாமலிருப்பது அறிவுள்ளவர்கட்கு அழகு. ௫

மனமானது நடு நிலைமையைத் தவறி நடக்குமாயின், அந்நினைவை, யான் கெட்டுப்போகும் குறி என்று ஒருவன் உணர வேண்டும். ௬

நடு நிலைமையில் நின்று அறத்தின் கண்ணே தங்கினவனது வறுமையை, வறுமையென்று கருதார் உயர்ந்தோர். ௭

நடு நிலைமையிலிருந்து, பின்னர் பண்டங்களைச் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, எப்பக்கமும் சாயாமல் நடுவு நிலைமையுடனிருப்பது அறிஞர்க் கழகு. ௮

நடுவு நிலைமையாவது சொல்லில் கோணுதலில்லாததாகும். அஃதுள்ளதாவது மனத்தில் கோணுதல் இல்லாத தன்மையைத் திண்மையாகப் பெறுவது. ௯

பிறர் பொருளையும் தம் பொருள்போல எண்ணி செய்தால் வியாபாரம் செய்வோருக்கு நல்ல வணிகமுறையாகும். ௰

# 12. நடுவு நிலைமை

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். 111

செப்ப முடையவ னுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து. 112

நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல். 113

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும். 114

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 115

கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின். 116

கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. 117

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. 118

சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின். 119

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். 120

# 13. தீநெறி செல்லாது அடங்குதல் உடையவனாதல்

அடக்கம் எனும் அறம் ஒருவனை தேவருலகத்தில் சேர்க்கும். அடங்காமையாகிய பாவம் தங்குதற்குரிய இருள் வழியில் செல்லும். க

உயிர்கட்கு அடக்கத்தினும் மிக்க செல்வமில்லை. ஆதலால், அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு அழியாமல் காக்க வேண்டும். உ

அடங்குதலே நமக்கு அறிவு என்றறிந்து நல்வழியில் ஒருவன் நடந்தால், அந்த அடக்கம் நல்லவர்களால் அறியப்பட்டு அவனுக்கு மேன்மை கொடுக்கும். ௩

இல்வாழ்க்கையாகிய நன்னெறியிலிருந்து வேறுபடாது நின்று அடங்கியவனது உயர்ச்சி, மலையின் உயர்ச்சியிலும் மிகப் பெரியது. ச

பெருமிதமின்றி யடங்குதல், எல்லார்க்கும் பொதுவாக நல்லதாகும். எனினும் செல்வமுடையார்க்கே வேறொரு செல்வமாகும் சிறப்பினை உடையது. ரு

ஆமை போல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனாயின், அது அவனுக்கு எல்லாப் பிறவிகளிலும் அரணாகும். சு

தம்மால் காக்கப்பட வேண்டிய எல்லாவற்றையும் காக்கமுடியாவிட்டாலும் நாவொன்றையாகிலும் காத்துக் கொள்க. இல்லையேல் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர். எ

தீய சொற்களின் பொருளால் வரும் துன்பம் என்றாயினும் ஒருவன்பால் உண்டாயின், அவனுக்குப் பிற அறங்களாலுண்டான நன்மை தீமையாகிவிடும். அ

ஒருவனை ஒருவன் தீயினால் சுட்ட புண்ணின் வடு இருந்தாலும் மனத்தின்கண் மாறிவிடும். வெவ்வுரையுடைய நாவினால் சுட்ட வடு என்றும் ஆறாது. கூ

கோபம் வராமல் காத்து, கல்வி கற்று, அடங்கி இருக்க வல்லவனுடைய செவ்வியை, அறம் அவனுடைய வழியில் சென்று பார்த்திருக்கும். ௰

# 13. அடக்கமுடைமை

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும். 121

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு. 122

செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின். 123

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது. 124

எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 125

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து. 126

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 127

ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும். 128

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. 129

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து. 130

# 14. நல்லொழுக்கத்தினை யுடையராதல்

ஒழுக்கம் எல்லாருக்கும் சிறப்பினை தருவதால், அவ்வொழுக்கம் உயிரினும் சிறந்ததாகப் பாதுகாக்கப்படும். ௧

அறங்கள் பலவற்றை ஆராய்ந்து தெளிந்தாலும் ஒழுக்கமே வாழ்வின் துணையாக விளங்கும். ஆகவே ஒழுக்கத்தை அழியாமல் போற்றிக் காக்கவேண்டும். ௨

உயர்குடிப் பிறப்பின் தன்மையாவது ஒழுக்கம் உடையவராக வாழ்வது. இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாவது ஒழுக்கம் தவறுதல். ௩

கற்றவற்றை மறந்துவிட்டால் மீண்டும் அதனைப் படித்துக் கற்றுக்கொள்ளலாம். ஆனால் பார்ப்பான் குடிப் பிறப்பு ஒழுக்கம் குன்றினால் கெடும். ௪

அழுக்காறு (பொறாமை) உடையானிடம் ஆக்கமில்லாததுபோல ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்ச்சி இல்லை. ௫

உள்ள உரம் உடைய சான்றோர், ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, ஒழுக்கத்தினின்றும் தவறாமல் தம்மைக் காத்துக்கொள்வர். ௬

எல்லோரும் ஒழுக்கத்தால்தான் மேம்பாடு எய்துவர். அதிலிருந்து தவறுதலால் அடையத் தகாத பெரும் பழியை அடைவர். ௭

இன்ப நல்வாழ்வுக்குக் காரணமாக இருக்கும் நல்லொழுக்கம். எப்போதும் துன்பத்தையே தரும் தீயொழுக்கம். ௮

மறந்தும் தீய வார்த்தைகளைத் தம் வாயால் சொல்லும் தொழில்கள், ஒழுக்கமுடைய உத்தமர்களுக்குப் பொருந்தாது. ௯

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதவர் பல நூல்களைக் கற்றவர்களாயினும் அறிவில்லாதவரே யாவர். ௰

# 14. ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும். 131

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை. 132

ஒழுக்க முடைமை குடிமை இழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். 133

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். 134

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. 135

ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து. 136

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 137

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 138

ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 139

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 140

# 15. பிறனுடைய இல்லாளை விரும்பாமை

உலகில் அற நூலையும், பொருள் நூலையும் ஆராய்ந்தவர்களிடம், பிறனுடைய மனைவியைக் காமுறுகின்ற அறியாமை இல்லை. க

காமங் காரணமாக பாவத்தின்கண் நின்றார் எல்லோருள்ளும், பிறன் மனைவியைக் காமுற்று அவள் வாயிலில் போய் நின்றாரைப்போல் பேதைகளில்லை. உ

தம்மை ஐயுறாதாரின் மனைவியிடத்தே காமுற்று, பாவஞ்செய்து ஒழுகுபவர், உயிருடையவரேனும் இறந்தவரே யாவர். ங

காம மயக்கத்தால் தினையளவும் தம் பிழையை ஆராயாது பிறன் மனைவியிடம் செல்லுதல், எத்துணைப் பெருமையுடையரேனும் யாதாய் முடியும்? ச

எளிய செயல் என்றெண்ணிப் பிறன் மனைவியிடம் காமுற்றுச் செல்பவன், என்றும் அழியாது நிலைத்த பழியை அடைவான். ரு

பிறன் இல்லாளிடம் நெறி தவறி செல்பவனிடம் பகை, பாவம், அச்சம், குடிப்பழி என்னும் குற்றங்கள் ஒருக்காலும் நீங்கா. சு

பிறருக்கு உரிமை பூண்டு அவனியல்பின் கண்ணே நிற்பவளது பெண் தன்மையை விரும்பாதவனே, அற இயல்போடு கூடி இல்வாழ்பவன். எ

பிறறுடைய மனையாளைக் காமக்கண் கொண்டு நோக்காத பெரிய ஆண்மை, சால்புடையவர்களுக்கு அறமும், நிரம்பிய ஒழுக்கமும் ஆகும். அ

பிறனுக்கு உரியவளின் தோள்களைப் பொருந்தாதவர்களே கடல் சூழ்ந்த உலகில் எல்லா நன்மைகளும் எய்துதற்குரியவர்கள். கூ

ஒருவன் அறம் செய்யாமல் பாவங்களைச் செய்தாலும், பிறருடைய மனைவியின் பெண்மையை விரும்பாமல் இருந்தால் நல்லது. ய

# 15. பிறனில் விழையாமை

பிறன்பொருளால் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல். 141

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல். 142

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார். 143

எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல். 144

எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 145

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். 146

அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். 147

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. 148

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார். 149

அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையான்
பெண்மை நயவாமை நன்று. 150

# 16. பொறுத்தலை யுடையராதல்

தம்மை தோண்டி துன்புறுத்துவோரையும், வீழாமல் தாங்கும் நிலம்போல், தம்மை அவமதிப்போரையும் பொறுத்தல் தலையான அறம். ௧

பிறர் செய்த எல்லை மீறிய தீமையைப் பொறுக்க வேண்டும். மேலும் அத்தீமையை உள்ளத்தில் நிறுத்தாது உடனே மறத்தல் பொறுத்தலினும் நல்லது. ௨

ஒருவனுக்கு வறுமையின் வறுமையாவது விருந்தினரை ஏற்றுக்கொள்ளாது நீக்குதல். அதுபோல வன்மையுள் வன்மையாவது அறிவின்மையால் தீங்கு செய்தோரைப் பொறுத்தல். ௩

ஒருவன் சால்புடைமை தன்னிடமிருந்து நீங்காதிருக்க விரும்பினால், பொறையுடைமையை அழியாமல் காத்தொழுக வேண்டும். ௪

தீமை செய்தவரை பொறுக்காமல் துன்புறுத்தியவரை அறிவுடையார் ஒரு பொருளென மதியார். தீமையைப் பொறுத்தவரைப் பொன்போல பொதிந்து கொள்வர். ௫

தமக்குத் தீங்கு செய்தவனை யொறுத்தார்க்கு உண்டாவது ஒரு நாள் இன்பமே. அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியும் அளவும் புகழுண்டாம். ௬

செய்யத்தகாத கொடுமையை தனக்குப் பிறர் செய்யினும், அவருக்கு அதனால் வரும் துன்பத்திற்கு நொந்து தான் அறமில்லாதவைகளை செய்யாமலிருத்தலே ஒருவனுக்கு நல்லது. ௭

மனச் செருக்கினால் தங்களுக்கு தீங்கு செய்தவரை, தாம் தம்முடைய பொறுமையால் வெல்லுதல் வேண்டும். ௮

இல்வாழ்க்கையிலிருந்து கொண்டே துறந்தவர் போலும் தூய்மை உடையவர், நெறி கடந்தவரின் கொடுஞ்சொற்களைப் பொறுத்துக்கொள்பவர். ௯

விரதமிருந்து உணவைத்தள்ளிப் பசிநோயைப் பொறுப்பவர் பிறர் கூறும் தீய சொற்களை பொறுப்பவர்களுக்கு அடுத்த நிலையுடையவர். ௰

# 16. பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. 152

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். 154

ஒறுத்தாரை ஒன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 155

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 156

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று. 157

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல். 158

துறந்தாரிற் றூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்ஞச் சொனேற்கிற் பவர். 159

உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்ஞச்சொல் நோற்பாரிற் பின். 160

# 17. பொறாமை கொள்ளாமை

தன் நெஞ்சத்தின்கண் பொறாமை என்னும் குற்றமில்லாத இயல்பினை, ஒருவன் தனக்கு ஒழுக்க நெறியெனக் கொள்ள வேண்டும். ௧

எவரிடமும் பொறாமை கொள்ளாமலிருக்கப் பெற்றால், ஒருவன் பெறும் சிறந்த பேறுகளுள் அப்பேற்றினை ஒப்பானதில்லை. ௨

அறமும் செல்வமும் ஆகிய உறுப்புகளை தனக்கு வேண்டாமென்று நினைக்கத்தக்கவனே, பிறர் செல்வம் கண்டு மகிழாது பொறாமை கொள்வான். ௩

அழுக்காறெனும் தீ நெறியில் தமக்குத் துன்பம் வருதலை யறிந்து, அழுக்காறு காரணமாக அறமல்லாதவற்றை செய்யமாட்டார்கள் அறிவுடையோர். ௪

அழுக்காறு பகைவரில்லாமலே கேடு பயப்பது ஆதலால், அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டாம். கேடு பயக்க அதுவே போதும். ௫

ஒருவன் பிறருக்குக் கொடுப்பது கண்டு பொறாமை கொள்வோனது சுற்றம், உடுக்கப்படுவதும், உண்ணப்படுவதுமின்றிக் கெடும். ௬

பிறர் ஆக்கம் கண்டு பொறாமைப்படுவனைத் திருமகள் தானும் பொறாது மூத்தாளுக்கு அவனைக் காட்டிவிட்டு நீங்குவாள். ௭

அழுக்காறு என்னும் ஒப்பில்லாத பாவி, தன்னை உடையானை இம்மையிலும், மறுமையிலும் தீய வழியில் செலுத்திவிடும். ௮

அழுக்காறு மனதில் கொண்டவனின் ஆக்கமும், செம்மையானவர்களின் கேடும் ஆய்ந்து பார்க்கத் தக்கவை. ௯

அழுக்காற்றைச் செய்து பெரியோரானாருமில்லை. அச் செயலில்லாதார் பெருக்கத்தில் நீங்கினாருமில்லை. ௰

# 17. அழுக்காறாமை

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு. 161

விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். 162

அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணாது அழுக்கறுப் பான். 163

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 164

அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது. 165

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 166

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும். 167

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 168

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 169

அழுக்கற்று அகன்றாரும் இல்லைஅஃது இல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல். 170

# 18. கவர்ந்துகொள்ளக் கருதாமை

பிறர்குரிய நல்ல பொருளை ஒருவன் நடுநிலைமை இன்றி பறிக்க நினைத்தால், அவன் குடியைக் கெடச்செய்து பல குற்றங்களையும் அவனுக்குக் கொடுக்கும். ௧

பிறர் பொருளைப் பறிப்பதனால் தமக்கு வரும் பயனை விரும்பி, பழியான செயல்களைச் செய்யார் நடுவு நிலைமை அல்லாதவற்றை கண்டு அஞ்சுபவர் ௨

நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறனல்லாத செயல்களைச் செய்யார், அறத்தால் வரும் நிலையான இன்பத்தைக் காதலிப்போர். ௩

யாம் வறியர் என்று கருதி, அது தீர்தற்காக பிறர் பொருளை விரும்ப மாட்டார்கள் ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத காட்சியினை யுடையார். ௪

பொருளை விரும்பி யாரிடத்திலும் அறிவுக்கு பொருந்தாத செயல்களை அறிவுடையோர் செய்வாரெனின் நுண்ணிய விரிவுடைய அவர்கள் அறிவால் ஆம்பயன் என்ன ? ௫

அருள் நெறியில் நின்று இல்லறம் விழைவோன், பிறர் பொருள்களை விரும்பி அதனைப்பெறும் குற்றங்களை எண்ணினால் கெடுவான். ௬

பிறர் பொருளை விரும்பி அதனாலான ஆக்கத்தை விரும்பாதே. பின்னர் அவ்வாக்கத்தின் பயன் நல்லதாவதில்லை. ௭

ஒருவனின் செல்வத்திற்கு குறைவு நேராதிருக்கக் காரணம் ஆராய்ந்தால், அவன் பிறனின் கைப்பொருளைத் தான் விரும்பாமலிருத்தலே யாகும். ௮

இஃதறனென்றறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையோரை திருமகள் தான் அடையும் திறன் அறிந்து அதற்கேற்றவாறு சென்றடைவாள். ௯

பின் விளைவதை அறியாமல் ஒருவன் பிறர் பொருளை விரும்பினால் அவ்விருப்பம் அவனுக்கு அழிவைத்தரும். அப்பொருளை வேண்டாமை வெற்றியைத் தரும். ௰

# 18. வெஃகாமை

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 171

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். 172

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 173

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். 174

அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். 175

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். 176

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். 177

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 178

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு. 179

இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு. 180

# 19. காணாவிடத்துப் பிறரைஇகழாமை

ஒருவன் அறம் என்னும் சொல்லைக்கூடச் சொல்லாது தீமைகள் செய்து ஒழுகினாலும், அவன் புறங்கூறுதல் செய்யான் என்று பெயர் பெறுதல் நன்று. ௧

ஒருவன் பெருமையை அவனுக்குப் புறத்தே அழித்துப் பேசி, அவனைக் கண்டபோது பொய்யாகப் புகழ்ந்து சிரித்துப் பேசுதல், அறத்தை சிதைத்து தீயன செய்தலினும் இழிவானது. ௨

காணாதபோது இகழ்ந்தும், கண்டபோது பொய்யாகப் புகழ்ந்தும் உயிர் வாழ்வதைவிட செத்துப்போதல் அறநூல்கள் கூறும் ஆக்கத்தைத் தரும். ௩

ஒருவன் எதிர் நின்று கண்ணோட்டமில்லாமல் கடுஞ்சொல் கூறினாலும், அவன் நேரிலில்லாதபோது அவன் அறியாத பழிச்சொற்களைக் கூறக்கூடாது. ௪

பிறருடைய நன்மையை எடுத்துக்கூற மனமில்லாதவனென்பது, புறங்கூறுகின்ற அவனது இழி குணத்தால் அறியப்படும். ௫

பிறரைப்பற்றி புறங்கூறுகின்றவனுடைய பழிச்செயல்கள் யாவற்றுள்ளும் மிக இழிந்தவை, பிறரால் தெரிந்தெடுத்து உரைக்கப்படும். ௬

மகிழும் வண்ணம் இன்சொற்களைப் பேசி நட்புக்கொள்ளுதலை நல்லது என்று அறியாதார், தம்மைவிட்டு நீங்கும்படி புறங்கூறி, நண்பர்களைப் பிரிந்து விடுவர். ௭

பழகிய நண்பரது குற்றத்தையும் புறத்தே தூற்றும் இயல்பு கொண்டவர்கள், அயலார் மாட்டு எவ்விதம் நடப்பரோ? ௮

பிறரில்லாத சமயத்தில் புறங்கூறி இகழ்ந்துரைப்பவனுடைய உடல் சுமையை பூமியானது பொறுத்திருப்பது, பொறையை அறமென்று கருதியே போலும்! ௯

பிறர் குற்றம்போல் தம் குற்றத்தையும், புறங்கூறுவார் காண வல்லாராயின், நிலைபெற்ற உயிர்க்கு அவரால் துன்பம் உண்டா? ௰

# 19. புறங்கூறாமை

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. 181

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை. 182

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும். 183

கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல். 184

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். 185

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். 186

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 187

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. 188

அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. 189

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. 190

# 20. பயனைத்தராத சொற்களைச் சொல்லாமை

பலர் கேட்டு வெறுக்கும்படி பயனில்லாத சொற்களைக் கூறுகின்றவன் எல்லோராலும் இகழப்படுவான். ௧

அறமற்ற செயல்களை தம் நண்பர்களிடம் செய்தலைக் காட்டிலும் பலர் முன்னே பயனற்ற சொற்களைக் கூறுதல் தீயதாகும். ௨

பயனற்றவைகளை ஒருவன் விரித்துரைத்துக்கொண் டிருந்தால், அவ்வுரைகள் அவன் சிறப்பில்லாதவன் என் பதை நன்கறியச் செய்யும். ௩

ஒருவன் பயனற்ற இழிச்சொற்களைப் பலரிடம் கூறுவானாயின் அவன் உரைகள் சிறப்பில்லாதனவாய் அவனை நன்மையிலிருந்து விலக்கிவிடும். ௪

பயனற்ற சொற்களை நற்பண்பினர் சொல்லுவார்களானால், அவர்களுடைய உயர்வும், மதிப்பும் நீங்கிப் போகும். ௫

பலமுறை பயனற்ற சொற்களையே சொல்லுகின்றவனை மனிதன் என்று கூறக்கூடாது. அவன் மனிதருள் பதர் என்று கூற வேண்டும். ௬

சான்றோர் சிறப்பில்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். பயனற்ற சொற்களைச் சொல்லாதிருந்தால் நல்லதாகும். ௭

பண்புமிகுந்த பொருள்களை ஆராயும் அறிவு படைத்தோர், மிக்க பயனற்ற சொற்களைச் சொல்ல மாட்டார்கள். ௮

மயக்கமற்ற, குற்றமற்ற அறிவுடையோர் மறந்தும் பயனற்ற சொற்களைச் சொல்லவே மாட்டார்கள். ௯

எதையாவது சொல்ல விரும்பினால் பயனுடைய சொற்களையே சொல்லுக. பயனற்ற சொற்களை சொல்லாது ஒழிக. ௰

# 20. பயனில சொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 191

பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது. 192

நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை. 193

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து. 194

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். 195

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல். 196

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. 197

அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். 198

பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர். 199

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 200

# 21. தீமைபயக்கும் செய்கைகளைச் செய்ய அஞ்சுத

தீவினை செய்தலாகிய அகந்தைக்கு தீவினையாள அஞ்சமாட்டார்கள். தீவினையற்ற உயர்ந்தோர் அதற்கு அஞ்சுவர். ௧

தீவினைகள் உண்மையில் துன்பத்தையே விளைவிப்பதால் தீய செயல்கள் தீயைப்பார்க்கிலும் கொடியன என்று அஞ்சப்படத் தக்கன. ௨

அறிவோடு செய்யும் செயல்களில் முதன்மையானது யாதெனில், தம்மை துன்புறுத்துவோர்க்கும் தீய செயல்களைச் செய்யாதிருத்தல். ௩

மறந்தும் பிறனுக்கு தீமை பயக்கும் செய்கையை எண்ணக்கூடாது. எண்ணினால் அவனுக்கு கெடுதி உண்டாக அறம் நினைக்கும். ௪

தான் வறியவன் என்றெண்ணி தீயவைகளைச் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் மீண்டும் அதிகவறியவனு வான். ௫

துன்பஞ் செய்யும் தன்மையுடைய பாவங்கள் தன்னை வருத்துதலை வேண்டாதவன் தீய செயல்களை தான் பிறருக்குச் செய்தல் கூடாது. ௬

பெரும் பகையுடையாரும் அப்பகையிலிருந்து தப்பிப் பிழைத்துக் கொள்ளலாம். ஆனால் தீவினைப் பகையோ ஒருவனை நீங்காது தொடர்ந்து வருத்தும். ௭

பிறருக்கு தீவினைகள் செய்தவர்கள் கேடு அடைதல் எவ்வாறெனில், ஒருவனின் நிழல் அவனை விடாது வந்து அடியில் தங்குவது போலாகும். ௮

தன்னைத்தான் விரும்பி வாழ்பவன் தீவினைப் பகுதியாகிய செய்கைகளுள் எவ்வளவு சிறிதாயினும் பொருந்தாமல் நீங்க வேண்டும். ௯

ஒருவன் நன்மார்க்கத்திலிருந்து வழுவிச் சென்று தீயவைகள் செய்யாதிருப்பானானால், அவன் கேடு இல்லாதவன் என்று அறியலாம். ௰

# 21. தீவினையச்சம்

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு. 201

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 202

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல். 203

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு. 204

இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 205

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். 206

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும். 207

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று. 208

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். 209

அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின். 210

# 22. இடர்வந்தபோது உதவுதல்

நீர் சுரக்கும் மேகங்களுக்கு உயிர்கள் என்ன கைம்மாறு செய்யக்கூடும்? அதுபோல தக்கவர்கள் கடமையாகக் கருதிச் செய்யும் உதவிகள் கைம்மாறு வேண்டாதவை. ௧

முயற்சி செய்து பெற்ற பொருள் முழுவதும் தக்கவர்களிடமிருக்குமாயின், அது பிறருக்கு உதவி செய்வதற்கே பயன்படும். ௨

வானுலகிலும், இவ்வுலகிலும் ஒப்புரவைப் போல வேறு நல்ல அறங்கள் செய்யக் கிடைப்பதரிது. ௩

உலகத்திற்குச் செய்ய வேண்டிய கடமையை அறிந்து செய்பவன் உயிர் வாழ்கின்றவனாவான். அதனை அறிந்து செய்யாதவன் செத்தாரில் ஒருவனாகக் கருதப்படுவான். ௪

உலக இயல்பறிந்து உதவும் மனமுடைய அறிவுடையோனின் செல்வம் ஊரார் நீர்உண்ணும் குளமானது நீரால் நிறைந்தாற் போன்றது. ௫

செல்வமானது நன்மை செய்பவனிடம் சேர்ந்தால், அது கனிதரும் மரம் ஊர் நடுவே பழுத்தாற் போன்றது. ௬

செல்வமானது உதவி செய்யும் நற்பண்பு படைத்தவனிடம் சேர்ந்தால், அது தன் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படும் மரத்தை ஒக்கும். ௭

இயற்கையாக கடமையை உணரும் அறிவினர், தம் செல்வம் சுருங்கிய காலத்தும் உபகாரம் செய்தற்கு தளர மாட்டார்கள். ௮

ஒப்புரவு செய்யும் நல்ல பண்பு உடையவன் வறுமைப்படுதல் என்பது செய்யத்தக்க கடமைகளைச் செய்யாமல் வருந்தும் நிலையை அடைதலேயாம். ௯

ஒப்புரவு செய்தலால் ஒருவனுக்கு கேடு வருமென்றால், அக்கேடு தன்னை விற்றாயினுங் கொள்ளத்தக்கது. ௰

# 22. ஒப்புரவறிதல்

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு. 211

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 212

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற. 213

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 214

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 215

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். 216

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். 217

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். 218

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு. 219

ஒப்புரவி னால்வரும் கேடெனில் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 220

# 23. இல்லாதவர்க்கு இல்லையென்னாது கொடுத்தல்

பொருள் இல்லார்க்கு அவர் வேண்டியவற்றை கொடுப்பதே ஈகை எனப்படும். மற்றவை குறியை எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது. ௧

ஏற்பது நல்லவழி என்றாலும் அஃது இழிவானது. மேலுலகம் கிடைக்காது என்று சொன்னாலும் பிறர்க்குக் கொடுப்பதே சிறந்தது. ௨

" நான் ஏழை " என்னும் இழிவான சொல்லை ஒருவன் சொல்லுமுன் கொடுத்தல் நற்குடியில் பிறந்தாரிடத்தே காணப்படும் செய்கையாகும். ௩

இரந்தவர் வேண்டிய பொருளைப்பெற்று முகமலர்ச்சி யடைதலை பார்க்கும்வரை வறியவரால் இரக்கப்படுதல் துன்பமானது. ௪

தவம் வல்லவருக்கு ஆற்றலாவது பசியைத் தாங்கிக் கொள்ளுதல் அவ்வாற்றலும், அப்பசியை தமது ஈகையால் மாற்றுவாரது திறமைக்குப் பிற்பட்டதே. ௫

ஏழைகளின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். ஏனெனில் பொருள் தேடியவன் அப்பொருளைத் தனக்கு உதவும்படி வைக்குமிடம் அதுவே. ௬

தான் உண்பதை பலருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணும் இயல்புடையவனைப் பசியெனும் தீய நோய் தீண்டாது. ௭

தம் செல்வத்தை ஈயாது வைத்து இழந்துபோகும் கருமிகள் ஏழைகளுக்கு வேண்டியன கொடுத்து அவர்கள் மகிழ்வதைக் கண்டு மகிழ அறியார்கள் போலும்! ௮

தம் பொருள் குறைவை நிரப்புவதற்காக பிறர்க்கு ஈயாமல் தாமே தனியாய் உணவு கொள்ளுதல் பிச்சை எடுப்பதைவிட துன்பந் தருவதாகும். ௯

இறப்பதைவிடத் துன்பமானது வேறில்லை. ஆனால் ஏழைகள் விரும்பிய தொன்றைக் கொடுக்க முடியாத நிலை ஏற்படின் இறப்பதே இனியதாகும். ௰

# 23. ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 221

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 222

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. 223

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு. 224

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். 225

அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி. 226

பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது. 227

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 228

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல். 229

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. 230

# 24. நல்லதன்மைகள் அழியாமல்நிற்கிறது

ஏழைகளுக்கு வேண்டுவதை கொடுக்க வேண்டும். அதனால் புகழ் உண்டாகும்படி வர்ழ வேண்டும். அந்த புகழைத் தவிர மக்கள் உயிருக்குச் சிறந்த பயன் கிடையாது. ௧

சிறப்பாகப் புகழ்ந்து பேசுபவர் சொல்பவை யெல்லாம் இரப்பவர்கட்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பவர் பால் நிற்கின்ற புகழ்பற்றியேயாகும். ௨

தனக்கு இணையில்லாமல் ஓங்கிய புகழைத்தவிர உல்கத்திலே அழியாமல் நிலைநிற்பது வேறொன்று மில்லை. ௩

இவ்வுலகின் எல்லை வரை பரவி நிற்கும் புகழை நிலை நாட்ட வல்லவனாயின், வானுலகம் தேவரைப் புகழாது அவனையே போற்றும். ௪

புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறக்கப்பெறுதலும், புகழ் வளர்ச்சிக்கு ஏதுவாய பொருட்கேடுறுதலும், நிலையான அறிவாற்றலுடையவர் அன்றி மற்றவர்களுக்கு அரிது. ௫

உலகில் தோன்றினால் புகழோடு விளங்க வேண்டும். புகழில்லாதவர்கள் மனிதராய்ப் பிறப்பதைக் காட்டிலும் பிறவாமை நன்று. ௬

புகழ் தமக்கு உண்டாகுமாறு வாழமாட்டாதவர்கள் அக்குறைக்காக தம்மை நொந்து கொள்ளுதலை விடுத்து தம்மை இகழ்ந்தவரை நொந்து கொள்ளுவதால் பயனென்ன ? ௭

தனக்கு பின்னர் நிற்கும் புகழ் எனும் சிறப்பை பெறு விட்டால், அதுவே உலகோரனைவருக்கும் பழியாகும் என்று அறிஞர் கூறுவர். ௮

புகழ்பெருத்த உடலைத் தாங்கிய நிலமானது, வளமான விளைவு இல்லாமல் குன்றிவிடும். ௯

தம்மிடம் பழி உண்டாகாமல் வாழ்கின்றவர்களே உயிர் வாழ்பவர்கள். புகழ் உண்டாகாமல் வாழ்பவரே இறந்தவராவர். ௰

# 24. புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. 231

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ். 232

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல். 233

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. 234

நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. 235

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 236

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன். 237

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். 238

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். 239

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 240

# 25. உயிர்களிடத்து உண்டாகும் இரக்கம்

பல்வகைச் செல்வங்களுள் அருட்செல்வமே சிறப்பான செல்வம். அஃது உயர்ந்தோர் மாட்டு உண்டாவது. பொருட் செல்வம் இழிந்தவரிடத்தும் உள்ளது. க

நன்னெறியிலே நின்று அருள் உள்ளவர்களாக விளங்க வேண்டும். பல வழிகளில் ஆராய்ந்து பார்த்தாலும் உயிர்க்குத் துணையாவது அருளே யாகும். உ

அருள் நிறைந்த உள்ளம் படைத்தவர்களுக்கு இருள் நிறைந்த இன்னல் உலகில் புகுதல் இல்லையாம். ங

நிலைபெற்ற உயிர்களைப் பாதுகாத்து அருளை மேற்கொண்டவனுக்கு, தன் உயிரின்பொருட்டு அஞ்சிவாழ்கின்ற தீவினைகள் உண்டாகா. ச

அருளை மேற்கொண்டவர்களுக்கு ஒரு துன்பமுமில்லை. அதற்கு காற்று இயங்குகின்ற வளமான பெரிய உலகில் வாழ்வாரே சான்றுவர். ரு

அருள் அற்றவர்களாய் கொடுமைகளைச் செய்வோர் உறுதிப் பொருளை இழந்துவிட்டு தாம்படும் துயரத்தையும் மறந்தவர் என்று நல்லோர் கூறுவர். சு

பொருளில்லாதவர்களுக்கு இவ்வுலக இன்பம் இல்லாததுபோல, அருளில்லாதவர்களுக்கு வீட்டுலகத்தின்பம் இல்லை. எ

வறியாரானவர்கள் வறுமை நீங்கியபின் சிறப்புறுதல் முடியும். அருளில்லாதவர்கள் அழிந்து போனவரே. அவர்கள் சிறப்படைவதில்லை. அ

அருளை மேற்கொள்ளாதவன் செய்யும் அறத்தை ஆராய்ந்து பார்த்தால், அது அறிவிலே தெளிவில்லாதவன் உண்மை பொருளை உணர்ந்தது போன்றது. கூ

அருளை மேற்கொள்ளாதவன் தன்னிலும் எளியவனை தான் வருத்த முயலுங்கால், தன்னை விட வலியவரின் முன் தான் பயந்து நிற்கும் நிலையை நினைக்கவேண்டும். ௰

# 25. அருளுடைமை

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 241

நல்லாற்ருல் நாடி அருளாள்க பல்லாற்ருல்
தேரினும் அஃதே துணே. 242

அருள்சேர்ந்த நெஞ்சினுர்க் கில்லே இருள்சேர்ந்த
இன்ஞு உலகம் புகல். 243

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினே. 244

அல்லல் அருளாள்வார்க்கு இல்லே வளிவழங்கு
மல்லன்மா ஞாலம் கரி. 245

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். 246

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லே பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. 247

பொருளற்ருர் பூப்பர் ஒருகால் அருளற்ருர்
அற்ருர்மற் ருதல் அரிது. 248

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்ருல் தேரின்
அருளாதான் செய்யும் அறம். 249

வலியார்முன் தன்னே நினேக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 250

# 26. ஊன் உண்ணுதலை ஒழித்தல்

தன்னுடல் வீங்குவதற்காக மற்றோர் உயிரை தின்பவன் எங்ஙனம் அருளுடையவனாக முடியும்? ௧

பொருளினால் வரும் பயனை அடைதலை அதனைப் பாதுகாக்காதவற்கில்லை. அதுபோல அருளினால் வரும் பயனை அடைதல் ஊன் உண்பவர்க்கில்லை. ௨

கொலைக் கருவியைக் கைக்கொண்டவனின் மனம் கொலையையே நோக்கும். அதுபோல ஒருயிரின் உடலை சுவைத்துண்பவனின் மனம் ஊனையே நோக்கும். அருளைப் போற்றாது. ௩

அருள் எதுஎன்றால் கொல்லாமை. அருளல்லது எதுவெனில் கொல்லுதல். அக்கொலையால் வந்த ஊனை உண்பது பாவம். ௪

புலால் உண்ணாமலிருந்தால், சிலவகை உயிர்கள் வாழ்வு பெறும். புலாலை உண்டால் அவனை விழுங்கிய நரகம் வாய்திறந்து உமிழாது. ௫

புலால் உண்ணும் நோக்கத்துடன் உலகத்தார் உயிர்க்கொலை செய்யாரெனின், ஊனை விலைக்கு விற்பவர் எவரும் இல்லாமற் போவர். ௬

வேறோர் உயிரின் புண்ணே — புலால் என்னும் உண்மையை அறிவாராயின், எவரும் புலால் உண்ண மாட்டார்கள். ௭

தெளிவுள்ள அறிஞர்கள், ஓர் உயிரிடத்திலிருந்து பிரிந்த உடம்பாகிய ஊனை யுண்ணார். ௮

அவிர்களை தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதைவிட, ஓர் உயிரைக் கொன்று உண்ணாமலிருப்பது மிக்க நல்லது. ௯

உயிர்க் கொலை செய்யாதவனை, ஊன் உண்ணாதவனை எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும். ௰

## 26. புலான் மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 251

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. 252

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம். 253

அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல். 254

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு. 255

தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். 256

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின். 257

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன். 258

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. 259

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். ?60

## 27. துன்பங்களைப்பொறுத்து நலங்களைச்செய்தல்

தன்னுயிருக்கு ஏற்படும் துன்பங்களை சகிப்பதும், மற்ற உயிர்கட்கு துன்பம் உண்டு பண்ணாமலிருத்தலுமே தவத்தின் வடிவம். க

தவம், தவமுடையவர்களுக்கே பொருந்துவதாகும். அதனை தவவொழுக்கமற்றவர்கள் மேற்கொள்வது வீணாகும். உ

இல்லறத்தார், துறவறத்தார்க்கு உணவு, உடை முதலியவை தந்துதவ வேண்டும் என்றுதான் தவத்தொழிலை மேற்கொள்ளவில்லை போலும். ங

பகைவரை அடக்கலும், நண்பரை உயர்த்தலும், எண்ணியவுடன் செய்யும் ஆற்றல் தவத்தால் வரும். ச

நினைத்த பயன்களை நினைத்தபடியே அடைய முடியும். ஆகவே, செய்யத் தகுதியுடைய தவத்தை இன்னும் முயன்று செய்யலாம். ரு

தன்கடமைகளைச் சரிவர செய்பவரே தவம் செய்பவர் மற்றவர் ஆசைக்கு ஆட்பட்டு வீண்முயற்சி செய்பவர். சு

தீயினால் சுடும்பொன் சுடச் சுட தன்னோடு கலந்த குற்றம் நீக்கி ஒளியால் மிகுவதுபோல, துன்பம் வருத்த வருத்த தவம் செய்பவர்க்கு அறியாமை நீங்கி அறிவொளி மிகும். எ

தன்னுயிரைத் தான் தனக்குரித்தாகப் பெற்றவனை, அது பெருதனவாகிய மன்னுயிர்களெல்லாம் தொழும். அ

தவத்தால் வரும் ஆற்றலைப் பெற்றவர்க்கு கூற்றத்தை வெல்லுதலும் கைகூடும். கூ

ஆற்றல் அற்றவர்கள் பலராக இருப்பதன் காரணம் தவம் செய்பவர் சிலர். தவம் செய்யாதவர் பலராக இருப்பதுவே யாகும். ௰

# 27. தவம்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. 261

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது. 262

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம். 263

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். 264

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 265

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. 266

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. 267

தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும். 268

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. 269

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 270

# 28. தீயவொழுக்கம்

வஞ்சகனுடைய பொய்மையான ஒழுக்கத்தைக் கண்டு, அவனுடைய பஞ்ச பூதங்களும் தமக்குள்ளே சிரிக்கும். க

தான் குற்றமென்று அறிந்ததன் கண்ணே தன்மனம் செல்லுமானால், ஒருவருக்கு வான்போலும் உயர்ந்த தவ வேடம் என்ன பயனைத் தரும்? உ

மனதை அடக்கும் ஆற்றல்இல்லாதவன் மேற்கொண்ட வலியுள்ள தவக்கோலமானது, பசு புலித்தோலை போர்த்துக்கொண்டு பயிரை மேய்ந்தது போன்றது. ௩

தன் வேடத்தில் தன்னை மறைத்துக்கொண்டு தீயவை செய்தல், வேடன் புதரில் மறைந்து வலைவீசிப் பறவைகளை பிடிப்பது போன்றது. ச

"நாங்கள் உற்றற்றவர்கள்" என்று சொல்லுபவர்களின் பொய்யொழுக்கமானது, பின்னர் "என் செய்தோம்" என்று தாமே இரங்கும்படியான இன்னல்களைக் கொடுக்கும். ரு

உள்ளமாற பற்றுக்களை துறவாமல், துறந்தவரைப் போல் நடித்து வஞ்சனை செய்து வாழ்பவர்களைவிட இரக்கமற்றவர்கள் யாருமில்லை. சு

வெளியில் குன்றிமணியைப் போல வேடத்தால் செம்மையுடையராயினும், அதன் மூக்குபோல் மனம் இருண்டிருப்பவரையும் உடையது உலகம். எ

மனம் மாசுடையதாக இருக்க, தவமகிமை பெற்றவர் போல் நீரில் மூழ்கிக் காட்டி மறைந்து நடக்கும் வஞ்சக மாந்தர் பலர் உளர். அ

அம்பு நேராக இருந்தாலும் அது கொடியது. யாழின் கொம்பு வளைந்திருந்தாலும் அது நல்லது. அதுபோலவே மாந்தர் குணங்களை செயல்முறையில் உணர்தல் வேண்டும். கூ

உலகத்தார் பழிக்கும் தீமையை ஒழித்துவிட்டால் மொட்டையடித்தலும் வேண்டாம். சடைவளர்த்தலும் தேவையில்லை. ௰

# 28. கூடா ஒழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 271

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின். 272

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. 273

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. 274

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவுந் தரும். 275

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். 276

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து. 277

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். 278

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல். 279

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். 280

# 29. வஞ்சித்துக்கொள்ள கருதாமை

இழிவில்லாத வாழ்வை விரும்புகின்றவன், யாதொரு பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக்கொள்ள கருதாத வாறு நெஞ்சைக் காக்கவேண்டும். ௧

குற்றங்களை நெஞ்சால் கருதுவதும் குற்றமாகும். ஆதலால் பிறன் பொருளை அவனுக்குத் தெரியாமல் வஞ்சித்துக் கொள்வோமென்று கருதாதே. ௨

களவினால் கொள்ளும் பொருள் வளர்வதுபோலத் தோன்றித் தன் எல்லையைக் கடந்து கெட்டுவிடும். ௩

பிறர்பொருளை வஞ்சித்துகொள்ளுதலில் உள்ள வேட்கை, அது பயன் கொடுக்கும்போது தொலையாத துன்பத்தைக் கொடுக்கும். ௪

அருளின் உயர்வறிந்து அதன்மேல் அன்புடையராதல், பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவரது சோர்வை பார்ப்பவரிடம் உண்டாகாது. ௫

களவின்கண்ணே மிக்க வேட்கையை யுடையவர், உயிர் முதலியவற்றை அறத்தாலாகிய நெறியின்கண் நின்று அதற்கேற்ப ஒழுக மாட்டார். ௬

களவு என்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினை யுடையராதல், உயிர்முதலியவற்றை அளத்தல் என்னும் பெருமையை விரும்பினார்களிடம் இல்லை. ௭

அளவறிந்து வாழும் நெஞ்சில் அறம் நிலைபெற்றாற் போல, களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை நிற்கும். ௮

களவைத் தவிர பிறவற்றை அறியாதவர், அவ்வள வல்லாத தீய நினைவுகளை நினைத்தபொழுதே கெடுவர். ௯

களவு செய்வோருக்கு உயிருடன் கூடிய உடம்பு தவறும். களவு செய்யாதவர்களுக்கு வானுலகம் வாய்க்கத் தவறாது. ௰

# 29. கள்ளாமை

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. 281

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 282

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். 283

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். 284

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். 285

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர். 286

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். 287

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு. 288

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். 289

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. 290

# 30. மெய் சொல்லுதல்

வாய்மை என்று சொல்லப்படுவது எதுவெனில், எவ்வகையான தீங்குமில்லாத சொற்களைக் கூறுதலே யாகும். க

குற்றமற்ற நன்மையைக் கொடுக்குமாயின் பொய்ச் சொற்களும், மெய்ச்சொற்கள் என்று கருதும் நிலையைப் பெறும். உ

மனதில் பட்டதை மறைத்து பொய்பேசுதல் கூடாது. அங்ஙனம் பொய் சொன்னால் தன்நெஞ்சே தனக்குத் துன்பத்தைக் கொடுக்கும். ௩

தன் நெஞ்சறிய பொய் இல்லாமல் நடப்பானானால், உயர்ந்தோர் எல்லாருடைய உள்ளத்திலும் இருப்பவனாவான். ௪

தன் மனதிற்கு மாறுபடாத உண்மையைப் பேசுவாரானால், அவர் தானம், தவம் இரண்டையும் செய்தவரைவிட சிறப்புடையவர். ௫

பொய்இல்லாமல் வாழ்வதைப்போல புகழ் தருவது இல்லை. இது ஒருவனுக்கு சிறு உடல் வருத்தமும் இல்லாமல் நன்மைகளைத் தரும். ௬

பொய்யாமையை மெய்யாகப் போற்றி வாழமுடியுமானால், பிற அறங்களைச் செய்யாதிருத்தலும் நன்மையே. எ

புற உடலில் சுத்தம் தண்ணீரால் உண்டாகும். அதுபோல உள்ளத்தின் சுத்தம் குற்றமற்ற மெய்மையால் உண்டாகும். அ

வெளியிருளைப் போக்கும் விளக்குகள் எல்லாம் சிறந்தனவல்ல. நல்லவர்களுக்கு உள்ளத்து இருளை போக்கும் மெய்மை விளக்கே சிறந்த விளக்கு. ௯

நிலையான பொருளாக ஆய்ந்தறிந்தவற்றுள் எந்த விதத்திலும் மெய்மையைவிட சிறந்த பொருள் நிச்சயமாக இல்லை. ௰

# 30. வாய்மை

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 291

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 292

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 293

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். 294

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. 295

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும். 296

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 297

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். 298

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 299

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. 300

# 31. சினங் கொள்ளாமை

தன் கோபம் பலிக்குமிடத்தில் அது வராமல் தடுப்பவனே சினம் காப்பவன். கோபம் பலிக்காத இடத்தில் அதனைத் தடுத்தாலென்ன? தடுக்காவிட்டாலென்ன? க

தன்னிலும் வல்லவர்களிடத்து கோபம் கொள்ளுதல் கெடுதியை விளைவிக்கும். மெலியவரிடத்தில் அது உண்டானாலும் மிக்க கேட்டையே விளைக்கும். உ

ஒருவனுக்கு தீயனவெல்லாம் கோபத்தால் உண்டாகின்றன. ஆகவே, யாரிடத்தும் கோபம் கொள்ளுதலை மறக்கவேண்டும். ௩

புன்சிரிப்பையும், அன்பையும் அழிக்கும் கோபத்தை விட வேறு கொடிய பகைப்பொருள்கள் ஒருவனுக்கு உண்டா? ௪

துன்பம் வராமல் தன்னைப் பாதுகாக்க விரும்பினால், தனக்கு கோபம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் அது தன்னையே அழித்துவிடும். ௫

தன்னை அடுத்தவரைக் கொல்லும் கோபம் என்னும் நெருப்பானது, கோபம் கொண்டவரின் சுற்றம் என்னும் கரை சேர்க்கும் தெப்பம் போன்றவரையும் சுட்டழிக்கும். ௬

நிலத்தின்கண் கையை மோதினவன் துன்புறுதல் போல், தன் திறமையைக் காட்ட கோபத்தைக் கருவியாக கொண்டவன் கெட்டுப் போவான். ௭

தொகுதியான தீச்சுடருள் தோய்ந்தாற்போலத் துன்பத்தை ஒருவன் செய்தபோதிலும், அவன் தன்னிடம் கூட வரும்போது கோபம் கொள்ளாதிருத்தல் நன்று. ௮

தன்னுடைய உள்ளத்தில் கோபத்தை ஒருக்காலும் நினையாதவனாயின் அவன் நினைத்தவெல்லாம் ஒருங்கே கைகூடும். ௯

பெருஞ்சினம் கொண்டவர்கள் செத்தாரோ டொப்பர். சினத்தை ஒழித்தவர் பற்றற்ற துறவிகட்கு ஒப்பாவர். ௰

# 31. வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என். 301

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற. 302

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும். 303

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. 304

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 305

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். 306

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 307

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 308

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். 309

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 310

# 32. துன்பஞ் செய்யாமை

பெருமையைத் தரவல்ல செல்வங்களைப் பெறுவதானாலும், பிறருக்கு துன்பஞ் செய்யாதிருத்தலே குற்றமற்றவரின் கொள்கை. க

ஒருவன் தன்மேல் செற்றங்கொண்டு இன்னல்களை விளைவித்தாலும் மீண்டும் அவனுக்கு தீங்குசெய்யாதிருத்தலே குற்றமற்றவரின் கொள்கை. உ

தான் ஒரு தீமையும் செய்யாமலிருக்கத் தனக்குத் துன்பம் விளைவித்தவர்க்கும் தீங்குசெய்தால் தப்பமுடியாத துயரத்தைத் தரும். ௩

தீங்கு செய்தவரை தண்டித்தல், அவர் வெட்கம் அடையும்படி அவருக்கு உவப்பானவற்றைச் செய்து அவர் கெடுதியையும், தான்செய்த நன்மையையும் மறந்து விடுதலேயாம். ச

பிற உயிர்களின் துன்பத்தை தன்துன்பம்போல் கருதி அதனைப் போக்காவிடில், தாம் பெற்ற அறிவினால் உண்டாகும் பயன் என்ன? ரு

துன்பம் தருவன என்று தான் அறிந்தவற்றைப் பிறர்க்குச் செய்ய மனதால்கூட கருதாதிருத்தல் வேண்டும். ௬

தீங்கு தருவனவற்றை எக்காலத்திலும், எவ்வளவு சிறிதாகவாயினும் யாவருக்கும் மனதால்கூட செய்யாமை மிகச் சிறந்ததாகும். எ

பிறர்செய்யும் தீமைகள் தன்னுயிர்க்கு துன்பம் தருவதை உணர்பவன், பிறஉயிர்களுக்கு தாம் தீமை செய்தல் எதனாலோ? அ

முற்பகலில் ஒருவன் மற்றவர்களுக்குத் தீமை செய்தால் பிற்பகலில் அத்தீமைகள் அவனுக்குப் பிறர் செய்யாமல் தாமாகவே உண்டாகும். ௯

தீமைகள் தீமை செய்வாரை வந்தடையும். ஆகவே துன்பமின்றி வாழவிரும்புகின்றவர்கள் பிறர்க்கு இன்னல்கள் செய்யமாட்டார்கள். ௰

# 32. இன்னா செய்யாமை

சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள். 311

கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள். 312

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். 313

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 314

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. 315

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 316

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 317

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல். 318

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும். 319

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 320

# 33. உயிர்களைக் கொல்லாதிருத்தல்

அறச் செயல் எதுவென்றால், எந்த உயிரையும் கொல்லாதிருத்தல். கொலை செய்தல் அறத்திற்குப் புறம்பான பாவச் செயல்களுக்கு இடமாகும். ௧

அறநூல் வல்லுநர் தொகுத்த அறங்களில் தலையான அறமானது உண்பதை பகுத்துத் தந்து தானும் உண்டு, பல்லுயிர்களையும் காப்பாற்றுதலேயாகும். ௨

எல்லா அறங்களிலும் தனிச் சிறப்புடையது கொல்லாமை. அடுத்த நிலையில் சிறந்து நிற்பதற்குரியது பொய்யாமையாகும். ௩

நல்லவழி என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதெனின், எவ்வுயிரையும் கொல்லாத அறத்தை போற்றும் நெறியாகும். ௪

துன்ப நிலையை உணர்ந்து பயந்து துறந்தவர்கள் எல்லோரையும்விட, கொல்லாமை எனும் அறத்தை போற்றுபவனே சிறந்தவனாவான். ௫

கொல்லாமை என்னும் கொள்கையை மேற்கொண்டு ஒழுகுபவனுடைய வாழ்நாளின்மேல், உயிரைக் கொண்டு செல்லும் யமன் செல்லமாட்டான். ௬

தன்னுயிர் போகக் கூடியதாயிருந்தாலும் அதை தடுக்கத்தான் வேறோர் உயிரை நீக்கும் தொழிலால் ஈடுபடக் கூடாது. ௭

நன்மையானது, கொலை செய்தவன்மூலம் அதிகமாகக் கிடைப்பினும், அந்த நன்மை கொலை காரணமாக வருவதால் அது சான்றோர்க்கு இழிவானதாகும். ௮

கொலைத் தொழிலின் மிக்க இழிவை உணர்ந்தவரது உள்ளத்தில் கொலைத் தொழில் செய்பவர் புலைத்தொழிலுடையவராகவே கருதப்படுவர். ௯

நோயுடம்புடனும், வறுமை மிகுந்த வாழ்க்கையினை யுடையார், முன்பு, பல உயிர்களை உடல்களிலிருந்து நீக்கினவர். ௰

# 33. கொல்லாமை

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும். 321

பருத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை. 322

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 323

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. 324

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. 325

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணுங் கூற்று. 326

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. 327

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. 328

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. 329

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 330

# 34. பொருள்களின் நிலையாமை கூறல்

நிலையற்றவைகளை நிற்பவை என்று கருதும் இழிந்த அறிவுடையராதல் இழி நிலையாகும். ௧

பெருஞ்செல்வம் சேர்தல் கூத்தைக்காண கூட்டம் சேர்வது போன்றது. அச்செல்வம் நீங்கும்போதும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போலாகும். ௨

நிலையான இயல்பினையுடையது செல்வம். அதனைப் பெற்றால், உடனே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும். ௩

காலத்தின் மெய்த் தன்மையை உணர்வாரைப் பெற்றால், நான் என்பது ஒரு சிறு அளவுபோல் காட்டி உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாளாகும். ௪

சாங்காலத்தில் பேச முடியாமல் நாவடைத்து விக்கல் வருவதற்கு முன்னரே அறச் செய்கையை விரைந்து செய்யப்படவேண்டும். ௫

நேற்று வாழ்ந்தவன் இன்று இல்லை யென்னும் சொல்லும் நிலைமையாகிய இழிவை உடையது இந்த உலகம் ௬

ஒரு கணப்போது கூட உலகில் வாழும் தன்மையை தெரியமாட்டாதவர்கள், கோடிக்கு மேம்பட்ட பல வீணை எண்ணங்களை எண்ணுவார்கள். ௭

உடம்புக்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பு முட்டையை விட்டு குஞ்சு ஓடிப்போனாற் போலும் தன்மையுடையது. ௮

உறக்கம் வருவதைப் போல்வது சாவு. உறங்கி விழிப்பதைப் போல்வது பிறப்பு. ௯

உடம்பின் ஒரு மூலையில் குடியிருந்துழல்கின்ற உயிர்க்கு நிலையாய்ப் புகுந்து தங்கும் வீடு அமையவில்லை போலும்! ௰

## 34. நிலையாமை

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 331

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. 332

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 333

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின். 334

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 335

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு. 336

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 337

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு. 338

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 339

புக்கில் அமைத்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. 340

# 35. ஆசையை விடுதல்

எவ்வெப் பொருள்களிலிருந்து தன் பற்றை நீக்கிக் கொள்ளுகின்றானோ அப்பொருள்களால் அவன் துன்புறுவ தில்லை. க

நல்ல நிலைமை வேண்டுமெனில், பொருள்கள் உள்ள நல்ல காலத்திலேயே துறக்கவேண்டும். துறந்தபின் பல நன்மைகளைப் பெறக்கூடும். உ

ஐம்புலன்களையும் அடக்கி வெல்லுதல் வேண்டும். அதற்கு ஐம்புலன்களின் நுகர்ச்சிக்கு வேண்டிய பொருள் களை யெல்லாம் விட்டுவிட வேண்டும். ங

ஒரு பற்றும் இல்லாதிருத்தலே தவம் செய்வதற்கு இயல்பாகும். பொருளுடைமை (பற்று) மீண்டும் மயங்கு வதற்கு வழி செய்யும். ச

பிறப்பறுத்தலை மேற்கொண்டவர்க்கு உடலே வேண் டாத பொருளாகும். ஆகவே உடலால் அனுபவிக்கும் மற்ற பொருள்களின் தொடர்பு எதற்கு தேவை? ரு

உடம்பைத் தானென்றும், பொருளைத் தனதென்றும் எண்ணும் மயக்கத்தை ஒழித்தவன் வானவர்க்கும் எட்டாத உயர்ந்த நிலை பெறுவான். சா

இருவ்கைப் பற்றினுக்கு முரிய பொருள்களை விரும்பி துறக்காதவர்களை, துன்பங்கள் இறுகப் பற்றிக்கொண்டு விடமாட்டா. எ

முற்றும் துறந்தவர் மேல் நிலையை அடைந்தவராவர். மற்றவர்கள் அறியாமை உடையவராகி இன்னல் வலையுள் அகப்பட்டவராவர். அ

இருவகைப் பற்றும் தொலைந்த உடனே அஃது அவன் இன்னலைப் போக்கும். பற்றாதபோது பிறந்து இறந்து உழலும் நிலையில்லாத் தன்மையே காணப்படும். கூ

எதன்மீதும் பற்றில்லாத முதல்வனை அடைவதற்கான அன்பினைப் பற்றிக்கொள்ளவேண்டும். உலகப் பற்றுகளை விட்டொழிப்பதற்கு அவ்வன்பினைக் கடைப்பிடித்தல் வேண்டும். ௰

# 35. துறவு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். 341

வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல. 342

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. 343

இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. 344

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்ருர்க்கு உடம்பும் மிகை. 345

யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். 346

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 347

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 348

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். 349

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 350

# 36. தத்துவ ஞானம்

பொய்ப் பொருளை மெய்ப் பொருளென்று தவருககை கருதும் மயக்கத்தாலே சிறப்பில்லாத பிறப்புஉண்டாகும். க

மயக்கத்திலிருந்து தெளிந்து மாசற்ற மெய்யுணர்வுடையவர்க்கு, அம் மெய்யுணர்ச்சி துன்பம் போக்கி இன்பந்தரும். உ

ஐய உணர்ச்சி நீங்கி தெளிவாக உண்மைப் பொருளையுணர்ந்தார்க்கு இவ்வுலகைவிட வீட்டுலகம் அண்மையில் இருப்பதாகும். ங

ஐம்புல உணர்ச்சியை தன் வயமாகப் பெற்றிருந்தாலும், அதனால் மெய்யுணர்வு அற்றவர்களுக்கு நிலையான பயன் இல்லை. ச

எந்த பொருள் எந்தவித இயல்புடையதாகத் தோன்றினாலும், அந்தப் பொருளின் உண்மையான இயல்பை அறிவதே தெளிந்த அறிவாகும். ரு

கற்க வேண்டியவைகளைக் கற்றறிந்து உண்மைப் பொருளை யுணர்ந்தவர்கள் மறுபடியும் பிறவா நெறியை அடைவர். சு

அறிவானது உண்மையை ஆராய்ந்து, அதனை அனுபவித்து உணருமாயின், அவனுக்குப் பிறவி உண்டென்று திண்ணமாக எண்ண வேண்டாம். எ

பிறவிக்கு ஏதுவான அறியாமை நீங்கும் பொருட்டு, முத்தி நிலைக்கு ஏதுவான இன்ப மெய்ப்பொருளைக் காண்பதே சிறந்த அறிவாகும். அ

எப்பொருளுக்கும் சார்பாகிய மெய்ப்பொருளையுணர்ந்து பற்றுக் கெடுமாறு ஒழுகினால், சாரக்கூடிய துன்பங்கள் அவனைச் சாராது. கூ

விருப்பு, வெறுப்பு, அழியாமை என்னும் மூன்று குற்றங்களும் கெடும்படி ஒழுகினால், துன்பமென்பதே தொலைந்து ஒழியும். ۱௦

## 36. மெய்யுணர்தல்

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும் 351
மருளானும் மாணுப் பிறப்பு.

இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி 352
மாசறு காட்சி யவர்க்கு.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் 353
வானம் நணிய துடைத்து.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே 354
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் 355
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் 356
மற்றீண்டு வாரா நெறி.

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப் 357
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் 358
செம்பொருள் காண்பது அறிவு.

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச் 359
சார்தரா சார்தரு நோய்.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன் 360
நாமம் கெடக்கெடும் நோய்.

# 37. பற்றினை யொழித்தல்

அவா என்பது எல்லா உயிர்க்கும் எந்தக்காலத்தும் நீங்காது வருகின்ற துன்பப் பிறப்பினை விளைவிக்கும் வித்தாகும். க

ஒன்றை விரும்ப வேண்டினுல் பிறவாமையையே விரும்பவேண்டும். ஒரு பொருளையும் விரும்பாமலிருந்தால் அப்பிறவாமை தானே ஏற்படும். உ

எப்பொருளையும் விரும்பாமையைப்போல் சிறந்த செல்வம் உலகில் இல்லை. எவ்வுலகத்திலும் நிச்சயமாக இல்லை. ங

களங்கமற்ற புனிதத்தன்மை என்பது பற்றற்று இருத்தலே. அது மெய்ப்பொருளைப் பற்றிக்கொண்டால் தானே உண்டாகக் கூடியது. ச

துன்பமற்றவர் என்று கூறப்படுவர் ஆசையை ஒழித்தவரே. மற்றவர் முழுத் துன்பத்தினின்றும் நீங்கியவரல்லர். ரு

ஒருவனை ஏமாற்றி துன்பத்தின் கண்ணே வீழ்த்திக் கெடுப்பது ஆசையாகும். அவ்வாசைக்கு பயந்து அது வராமல் தடுப்பதே அறமாகும். சு

ஆசையினை முழுவதுந் தொலைக்க வல்லவனுயின், அவன் கெடாமல் வாழ்வதற்கு ஏற்ற நன்முயற்சி அவன் விரும்பிய வழியிலே தானே ஏற்படும். எ

ஆசையற்றவர்களுக்கு ஒரு துன்பமும் இலலை. ஆசை ஏற்பட்டுவிட்டாலோ துன்பங்கள் மேன்மேலும் தொடர்ந்து வரும். அ

துன்பங்களுக்குத் தலையான அவா என்னும் துன்பங் கெட்டு அழிந்தால், இவ்வுலகில் இடையருமல் இன்பம் வாய்க்கும். கூ

ஒருகாலும் நிரம்பாத தன்மை பொருந்திய அவாவினை ஒழிப்பானே யானுல், அந்த நிலை அவனுக்கு அப்போதே மாருத இயற்கை இன்பம் தரும். ய

# 37. அவா அறுத்தல்

அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும் 361
தவாஅப் பிறப்பீனும் வித்து.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது 362
வேண்டாமை வேண்ட வரும்.

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை 363
யாண்டும் அஃதொப்பது இல்.

தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது 364
வாஅய்மை வேண்ட வரும்.

அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார் 365
அற்றாக அற்றது இலர்.

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை 366
வஞ்சிப்ப தோரும் அவா.

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை 367
தான்வேண்டு மாற்றான் வரும்.

அவாஇல்லார்க் கில்லாகுந் துன்பம்அஃ துண்டேல் 368
தவாஅது மேன்மேல் வரும்.

இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும் 369
துன்பத்துள் துன்பங் கெடின்.

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே 370
பேரா இயற்கை தரும்.

## 38. இருநிலைப் பயன்களும் நாடிநிற்கும் முறை

கைப்பொருள் சேர்வதற்கு உரிய ஊழானல் நல்ல முயற்சி உண்டாகும். கைப்பொருள் ஒழிவதற்கு உரிய ஊழானல் சோம்பல் உண்டாகும். க

பொருள் இழத்தற் கேதுவான விதி அறியாமையைத் தரும். பொருள் சேர்வதற்கேதுவாகிய விதி அறிவை விரிவு செய்யும். உ

நுண்ணிய பல நூல்கள் கற்றுணர்ந்தாலும் அவனுக்கு விதிக்கேற்றவாறே அறிவு மேற்பட்டு நிற்கும். ௩

உலக இயல்பு ஊழினலே இரு வேறு வகைப்படும். செல்வம் உடையராவதற்குரிய ஊழ்வேறு. அறிவுடையோ ராதற்குரிய ஊழ்வேறு. ௪

பொருள் சேர்த்தற்கு நல்லவாயுள்ள கருவிகளெல்லாம் தீய ஊழினல் பயன்படாது போகும். தீயவை நல்லவை யாய் ஆதலும் உண்டு. ரு

ஊழினல் நம்மிடம் நிலைக்கக் கூடாத பொருள்களைக் காப்பாற்றினலும் நில்லாது. நம்மிடம் நிற்க வேண்டியவை களைகொண்டுபோய் எறிந்தாலும் போகா. ௬

கோடிக்கணக்கான பொருளைச் சேர்த்தவர்க்கும் வகுத்தான் (ஊழ்) விதித்த வகையல்லாமல் நுகர முடியாது. ௭

நேரக்கூடிய துன்பங்கள் வந்து வருத்தாமல் நீங்குமானல், ஏழைகள் துறவறத்தை மேற்கொள்வர். அ

நல்வினை நன்மை பயக்கும்போது அவற்றைக் கருதி மகிழ்கின்றவர், தீவினை விளையுங் காலத்து மனவருத்தப் படுதல் ஏனே? ௯

ஊழைவிட அதிக வலிவுடையன எவை? அதனை விலக்க சூழ்ச்சியைக் கடைப்பிடித்தாலும் அந்த ஊழ்தான் முற்பட்டு நிற்கும். ௰

# 38. ஊழ்

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி. 371

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. 372

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். 373

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு 374

நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு. 375

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச
சொரியினும் போகா தம. 376

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்தல் அரிது. 377

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின். 378

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 379

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். 380

(முற்றும்)

# ஆணவமற்றயிடம் ?

நானெனுஞ் செருக்கு மற்று நாணமும் பயமுமற்று
ஈனர்க ளுறவுமற்று மிருவினை யிரண்டுமற்று
கானமா மயிலிலேறுங் கடவுளார் மொழியுஞ்சொல்லி
மோனமா யெங்குநானுய் முதல்வனுட் கொண்ட
தெங்கே ?

2

பூமியில் வஞ்சஞ்செய்யும் புலையர்க ளுறவுமற்று
காமியர் கள்வர்லோபி கபடர்க ளுறவுமற்று
ஓமெனும் பொருளுங்காட்டிவுலகெலாம் தானுய்நின்று
காமனை யெரித்தவப்பன் கழல்காட்டி யாண்டதெங்கே?

3

கொலைபுலை களவுசெய்யுங் கொடியர்க ளுறவுமற்று
பலவுயிர் கொன்றுதின்னும் பாவிக ளுறவுமற்று
மலைமகள் மகிழ்ந்துகாண மயானத்தி லாடியங்கே
சிலைவடி வாக்கிக்காட்டி திருவடி தந்ததெங்கே ?

4

கல்விகள் பலவுங்கற்று கபடுகள் மனதிற்கொண்ட
புல்லர்க ளுறவுமற்று புழுவுடல் பாசமற்று

மெல்லிய ராசையற்று வெறுக்கைமேல் வெறுக்கை
வைத்து
இல்லையார் கோலங்காட்டி திருவடி தந்ததெங்கே ?

5

புலனெனும் வேடராட்டம் புவிதனி லொடுங்கக்
காணும்
அலைமன தடக்கியுள்ளே அண்ணலா ராடல்கண்டால்
மலைமகள் தோன்றியொன்ருய் மயானத்தில்
சிலம்புதாக்கி
தலைவனுர் தானேதாருய்த் தனித்துவாட் கொள்வான்
தானே.

☆


கடந்த 100 வருட காலமாக நம்பிக்கைக்கும்,
கைராசிக்கும், நாணயத்திற்கும் புகழ்பெற்று விளங்குவது ?

**பித்தளை, வெண்கலம், தாமிரம், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்**

**பாத்திரங்களுக்குச் சிறந்த இடம்**

**தாண்டவன் செட்டியார் பாத்திரக்கடை,**

பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி.

## இந்நூல் தொகுப்பாசிரியரின் இதர வெளியீடுகள்

**வெளிவருகிறது!** **ஏட்டுப்பிரதி அச்சு நூலாக!**

அகஸ்திய மாமுனிவரின் தவப்புதல்வர் "சித்தர்." இவர் இயற்றியவை, "வாதம் வயித்தியம், வளமிகு சோதிடம், ஓதுமெஞ்ஞானம், யோகசமாதி - மூலிகைகளின் ரகசியமும், செய்யப்படும் முறையும்பற்றி" பல்லாயிரம் ஏடுகள்.

யாவரும் எளிதில் உணரும்படி ஏட்டுப்பிரதியிலிருந்து முதன்முதலாக அச்சு நூலாக "வாதவயித்திய ஞானக் களஞ்சியம்" என்னும் பெயர் தாங்கி வெளிவருகிறது.

☆

திருச்சி மாவட்டம் மணலை. ஆங்கு கோயில் கொண்டெழுந்தருளியுள்ள "ஆண்டவனின்" பேரில்

# "மணவை ஆண்டவன் வருகைப் பதிகம்"

வெளிவர இருக்கிறது.

ஆக்கியோன்: ப. சு. கணபதன்.